'தமிழன்' பத்திரிகை வீடுகளுக்கு நேரடியாக விநியோகிக்கப்படும்



QR ஐ ஸ்கேன் செய்து தகவல்களை பெற்றுக்கொள்ளுங்கள்.

0777983308



# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 04, இதழ்: 93 சோபகிருது வருடம், ஐப்பசி மாதம் 13ஆம் திகதி திங்கட்கிழமை (30.10.2023) ஹிஜ்ரி 1445, ரபீஉல் ஆகிர் - 14 , 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50


## பூஸா சிறையிலிருந்து தொலைபேசிகள் மீட்பு



பூஸா சிறைச்சாலையின் பழைய கட்டட வளாகத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கையடக்கத் தொலை பேசிகள் உள்ளிட்ட பல பொருட்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

02 பக்கம்

## அரச ஊழியர்களுக்கு 12 மணிநேர வேலை

### வெளியானது முக்கிய அறிவிப்பு

ஊழியர் ஒருவர் நாள் ஒன்றுக்கு உணவு இடைவேளை உட்பட மேலதிக நேரக் கொடுப்பனவுகள் இல்லாமல் 12 மணி நேரம் பணியாற்ற வேண்டும் என்ற புதிய வேலைவாய்ப்புச் சட்டமூலம் முன்மொழியப்பட்டுள்ளது.

சட்டமூலத்தை தயாரிப்பதற்கான அமைச்சரவை பத்திரத்தை அமைச்சர் மனுஷ நாணயக்கார சமர்ப்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சட்டமூலம் ஊடாக எட்டு மணி நேர வேலை இல்லாது போவதுடன் எட்டு மணி நேர வேலை நேரத்துக்குப் பின் பணியாற்றும் ஊழியர்களுக்கான மேலதிக நேரக் கொடுப்பனவுகள் இல்லாமல் போகும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

வாரத்தில் 45 மணி நேரம் பணிபுரியும் ஊழியர் ஒருவருக்கு 1 1/2 நாட்கள் ஊதியத்துடன் கூடிய விடுப்பு வழங்கப்பட வேண்டும் என்று புதிய சட்டமூலம் பரிந்துரைத்துள்ளது.

அத்துடன், தொழிற்சங்கத்தை உருவாக்குவதற்கு குறைந்தது 100 உறுப்பினர்கள் இருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய வேலைவாய்ப்பு சட்டமூலம் ஊழியர் ஓய்வுபெறுவதற்கான குறைந்தபட்ச வயது 55 ஆக இருக்க வேண்டும் என்றும் 60 வயது வரை சேவையில்...

02 பக்கம்

# காஸாவில் மரண ஓலம்!



## மக்களைக் கொன்றுகுவிக்கும் இஸ்ரேலின் வெறியாட்டம் தொடர்கிறது

10 பக்கம்

## மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் லைக்கா நிறுவனத்துக்கு அபராதம்

### பாரிஸ் நீதிமன்றம் அதிரடி




பணமோசடி மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) மோசடிக்காக லைக்கா மொபைல் நிறுவனத்தின் பிரெஞ்சு நிறுவனங்களுக்கு பாரிஸ் நீதிமன்றம் வியாழக்கிழமை 10 மில்லியன் யூரோக்கள் அபராதம் விதித்தது.

02 பக்கம்

## போதையில் காரோட்டம் முன்னாள் டி.ஐ.ஜி கைது

### நாளைமறுதினம்வரை விளக்கமறியல்

மது போதையில் வாகனம் செலுத்தி விபத்து ஏற்படுத்தியமை தொடர்பில் கைது செய்யப்பட்ட முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரவி செனவிரத்ன விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ரவி செனவிரத்னவை கல்கிசை நீதவான் நீதிமன்றில் நேற்று (29) ஆஜர்படுத்தியபோது, அவரை நவம்பர் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

வெள்ளவத்தை பகுதியில் மெரின் டிரைவ் வீதியில்...

02 பக்கம்

## டலஸ் தலைமையில் எதிரணி பேச்சுவார்த்தை



எதிர்வரும் தேர்தலில் பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அலகப்பெரும தலைமையில் பொது எதிரணி அரசியல் கூட்டமைப்பை உருவாக்கி போட்டியிடுவது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட கட்சிகளுடன் கலந்துரையாட சுதந்திர மக்கள் சபை தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அந்தக் கட்சியின் உறுப்பினர்கள் பலரும் ஐக்கிய மக்கள் சக்தியுடன் அரசியல் கூட்டணி குறித்து தனித்தனியாக...

02 பக்கம்

### கமெண்ட் கந்தர்...



பதவியில் இருந்தபோது அந்த டீ.ஐ.ஜீ ஐயாவை போதையோடு பிடிச்சிருந்தா பிடிச்சவன்ட பதவி பறிபோயிருக்கும்.. பல் கழன்ற பாம்பை அடிக்கிறது பெரிய விஷயமில்லை பாருங்கோ..

## மருந்துகள் மற்றும் இரசாயன பொருட்களின் தட்டுப்பாடு

### மட்டுப்படுத்தப்பட்டுள்ள சத்திர சிகிச்சைகள்



மருந்துகள் மற்றும் இரசாயன பொருட்களின் தட்டுப்பாடு காரணமாக கொழும்பு தேசிய வைத்தியசாலை உட்பட பல வைத்தியசாலைகளில் சத்திர சிகிச்சைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக அகில இலங்கை தாதியர் சங்கம் தெரிவித்துள்ளது. குறித்த பிரச்சினைகளைத் தீர்க்க இதுவரை...

02 பக்கம்

## மேற்கு கடலில் ஆய்வு சீனக் கப்பலுக்கு அனுமதி



சீன ஆய்வுக் கப்பலான சியாங் 6, இன்றும் (30) நாளையும் (31) நாட்டின் மேற்குக் கடற்பரப்பில் கடல் ஆய்வுகளை மேற்கொள்ள அனுமதி வழங்கப் பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

02 பக்கம்

## உஷ்!



முன்னாள் எம்.பி. அமீர் அலியின் புதல்வரது திருமணம் கடந்த வெள்ளிக்கிழமை ஷங்கிரிலா ஹோட்டலில் நடந்தது.

முக்கிய அரசியல் பிரமுகர்கள் எல்லோரும் அங்கு அணி திரண்டு வந்திருந்தனர். நிகழ்வுக்கு வந்திருந்த பெசில் ராஜபக்ஷ கடைசிவரை ஆற அமர இருந்து எல்லோருடனும் கதைத்துப் பேசிவிட்டு சென்றாராம்.

வஜிர அபேவர்தனவை சுற்றிய தமிழ் எம்.பிக்கள் கூட்டம் தேர்தல் எப்போது என்று துருவித் துருவி விசாரித்துக்கொண்டிருந்ததாம்.

அமீர் அலி எல்லோருடனும் நட்பு பேணுபவர் என்றபடியால் முக்கியமான பிரமுகர்கள் எல்லோரும் அங்கு வந்திருந்ததாக சொல்லப்பட்டது.




எந்த இடத்திலிருந்தாலும் அதே இடத்திலிருந்தவாறு
சேமிப்பு கணக்கொன்றை இலகுவாக ஆரம்பித்திடுங்கள்

PEOPLE'S PAY

இப்போது PEOPLE'S PAY APP ஊடாக இருந்த இடத்திலிருந்தே சேமிப்பு கணக்கொன்றை அக்கணமே ஆரம்பியுங்கள்.

1. People's Pay app I Download செய்யுங்கள்
2. உங்கள் விபரங்களை உள்ளிடுங்கள்
3. டிஜிட்டல் சேவைகளுக்கு விண்ணப்பியுங்கள்
4. உங்கள் பொருத்தமான நேரத்திற்கு Non face to face call ஒன்றுக்காக நேரத்தை ஒதுக்கிக்கொள்ளுங்கள்

நீங்களும் இன்றே People's pay app பெற்றுக்கொடுக்கும் சிறந்த வசதிகளைப் பெற்றுக்கொண்டு நீங்களும் உங்கள் சுதந்திரத்தை அனுபவித்திடுங்கள்

மக்கள் வங்கியில் வைப்பு செய்யும் வைப்புக்கள் அனைத்தும் இலங்கை வைப்பு காப்புறுதி திட்டத்தின் கீழ் காப்பீடு செய்யப்பட்டுள்ளது.

www.peoplesbank.lk

1961 PEOPLE'S BANK CALL CENTRE

PEOPLE'S BANK

Pride of the Nation

A (lka), AAA



# தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் மத்திய அமைச்சர் ஜெய்ஷங்கருக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம்



இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழகத்தைச் சேர்ந்த 37 மீனவர்களையும் அவர்களது 05 மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்கக்கோரி வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்ஷங்கருக்கு, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், தமிழகத்தைச் சேர்ந்த 37 மீனவர்கள், படகுகளில் மீன்பிடிக்கச் சென்ற நிலையில், 28-10-2023 அன்று இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இம்மீனவர்கள் மீன்பிடித் தொழிலை மட்டுமே வாழ்வாதாரமாக கொண்டுள்ளனர். இவ்வாறான தொடர்ச்சியான கைதுகள் மீனவ சமூகத்தினிடையே மிகுந்த மன உளைச்சலையும் வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது.

இலங்கைக் கடற்படையினரின் இத்தகைய செயல்கள் தமிழகத்தின் மீனவ சமுதாயத்தினர் இடையே மன அழுத்தத்தையும் அச்ச உணர்வையும் ஏற்படுத்தியுள்ளது. தமிழக மீனவர்கள் தங்களது கோரிக்கைகள் ஏற்கப்படாமல் போவதாக உணர்கிறார்கள். நம் மீனவர்களின் உரிமைகளுக்காக மத்திய அரசு மேலும் வலுவாகக் குரல் கொடுக்க வேண்டும். அவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திடும் வகையில் பேச்சுவார்த்தை மேற்கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். பாக் வளைகுடா பகுதியில் நமது மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை பாதுகாக்க வேண்டும் என்ற கோரிக்கையை நான் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன்.

2023 ஒக்டோபர் மாதத்தில் மட்டும் தமிழகத்தைச் சேர்ந்த 64 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதோடு, 10 மீன்பிடிப் படகுகள் இலங்கைக் கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. மீனவர்கள் இதுபோன்று கைது செய்யப்படுவது தடுத்து நிறுத்தப்பட வேண்டும். இலங்கைக் கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட படகுகள் விடுவிக்கப்பட வேண்டும். இதுதொடர்பாக தொடர்ந்து கோரிக்கை விடுக்கப்பட்டு வரும் நிலையில் தமிழக மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவது தடையின்றி தொடர்வது வேதனையளிக்கிறது.

எனவே, இதற்கு முற்றுப்புள்ளி வைத்திடும் வகையில், இனியும் காலம் தாழ்த்தாமல் உடனடியாக உரிய நிலையான தூதரக வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டும் என்று தமிழக மக்கள் சார்பில் மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட அனைத்து மீனவர்களையும் மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்" என்று அக்கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

# வாகன இறக்குமதி தொடர்பில் அறிக்கை தயாரிக்க விசேட குழு

வாகன இறக்குமதி தொடர்பில் அறிக்கை தயாரிப்பதற்காக ஜனாதிபதி செயலகத்தினால் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

வாகனங்களின் தேவை, வீதிகளிலுள்ள இடவசதி, எரிபொருளுக்கான செலவு மற்றும் வாகன இறக்குமதிக்கான தொகை ஆகியன தொடர்பில் இங்கு விசேட கவனம் செலுத்தப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய குறிப்பிட்டார்.

# அரச சேவையாளர்கள் இன்று பணிப்புறக்கணிப்பு

அனைத்து அரச சேவையாளர்களும் இன்று (30) பாரிய வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பள அதிகரிப்பு மற்றும் ஓய்வூதிய முரண்பாடுகளுக்கு உடனடியாக தீர்வு கோரி நாடு முழுவதும் இவ்வாறு வேலை நிறுத்தம் மற்றும் எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

இதன்படி, நாடு முழுவதும் உள்ள அனைத்து அரச சேவையாளர்களும் இன்றைய தினம் வீதிக்கு இறங்குவதற்கு தயார் நிலையில் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

# துப்பாக்கிச் சூட்டின் காரணமாகவே இஸ்ரேலில் உயிரிழந்தார் அனுலா

## பிரேத பரிசோதனை அறிக்கையில் சுட்டிக்காட்டு




இஸ்ரேலில் பணியாற்றியபோது ஹமாஸ் அமைப்பினரின் தாக்குதலில் உயிரிழந்த இலங்கை பெண்ணான அனுலா ரத்நாயக்கவின் பிரேத பரிசோதனை வெளியாகியுள்ளது.

இதன்படி அனுலா ரத்நாயக்க துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளமை தெரியவந்துள்ளது.

அத்துடன் பிரேதப் பரிசோதனையின் போது அவரின் உடலில் பல தோட்டாக்கள் காணப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் தற்போது அவரது சடலம் களனியில் உள்ள அவரது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அனுலா ரத்நாயக்க இஸ்ரேலில் பணியாற்றியபோது கடந்த 7ஆம் திகதி ஹமாஸ் அமைப்பினரின் தாக்குதலில் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

# மத்திய கிழக்கில் உதவி தேவைப்படும் இலங்கையர்களுக்கு உதவ ஏற்பாடு

கொழும்பில் உள்ள வெளிவிவகார அமைச்சின் தூதரக விவகாரப் பிரிவு, இலங்கைப் பிரஜைகளுக்கு வெளிவிவகார அமைச்சைத் தொடர்புகொள்வதற்கும் மத்திய கிழக்கின் தற்போதைய மோதல் நிலைமை தொடர்பில் ஏதேனும் உதவிகளைப் பெறுவதற்கும் இரண்டு அவசர தொலைபேசி இலக்கங்களை வழங்கியுள்ளது.

துரித தொலைபேசி எண்கள் வருமாறு: 0094711 757 536 மற்றும் 0094711 466 585

கூடுதலாக, வெளிவிவகார அமைச்சின் தூதரக விவகாரப் பிரிவை வழக்கமான அலுவலக நேரங்களில் +94 112 338 837 என்ற தொலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல்: repatriation.consular@mfa.gov.lk மூலம் தொடர்பு கொள்ளலாம்.

அனைத்து இலங்கையர்களும் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்கவும் மோதலால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு செல்வதை தவிர்க்கவும் ஏதேனும் அவசரநிலை ஏற்பட்டால், டெல் அவிவ் (இஸ்ரேல்) மற்றும் ரமல்லா (பலஸ்தீனம்) ஆகிய இடங்களில் உள்ள இலங்கை தூதரகங்களுடன் தொடர்ந்து தொடர்பு கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# வானிலை அறிவற்றவர்கள் வளிமண்டலம் தொடர்பான கணிப்புகளை செய்யும் நிலை

## வெளியான முக்கிய தகவல்

இலங்கையில் காலநிலையில் துல்லியமான கணிப்புகளை செய்வதற்கு போதிய அறிவோ பயிற்சியோ இல்லாமல் வளிமண்டலவியல் திணைக்களத்தின் முன்னறிவிப்பு பிரிவில் சாதாரண தரம் மட்டும் சித்தியடைந்த ஐந்து வானிலை ஆய்வாளர்கள் பணிபுரிவதாக தகவல் வெளியாகியுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் தொடர்பாக பாராளுமன்றத்தின் பொதுக் கணக்காளர்கள் குழு அண்மையில் வெளியிட்ட விசேட அறிக்கையின் மூலம் இது தெரியவந்துள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் என்பது நாட்டுக்கு முன்வைக்கப்படும் சில கணிப்புகள் சரியாக இல்லாத காரணத்தினால் சமூகத்தால் அடிக்கடி விமர்சிக்கப்படும் ஒரு நிறுவனமாகும்.

குறிப்பாக விவசாயம் மற்றும் மக்களின் இயல்பு வாழ்க்கையை பேணுவதில் கடந்த காலங்களில் முன்வைக்கப்பட்ட பிழையான காலநிலை முன்னறிவிப்புகள் தொடர்பில் கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

இந்த நிலைமையை ஆராய்ந்த கோபா குழு தனது அறிக்கையில், துல்லியமான வானிலை முன்னறிவிப்புகளை வெளியிடுவதற்கு அவசியமான ரேடார் அமைப்பு இல்லாமல் 15 ஆண்டுகளாக வானிலை முன்னறிவிப்புகளையும் கணிப்புகளையும் நாட்டுக்கு வளிமண்டலவியல் திணைக்களம் வழங்கி வருகிறது.

இது தவிர, கொன்கலகந்த பகுதிக்கு கணிப்புக்கான ரேடார் அமைப்பை ஏற்படுத்த, திணைக்களம் 402 மில்லியன் ரூபா செலவிட்டுள்ளது. ஆனால் 13 ஆண்டுகளாக அது செயல்படுத்தப்படவில்லை.

### ரேடார் அமைப்பு

இந்த ரேடார் அமைப்பை நிறுவுவதற்காக கொண்டுவரப்பட்ட உபகரணங்களில் 91 இலட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் ஏற்கனவே காணாமல் போயுள்ளதாக கோபா அறிக்கை காட்டுகிறது.

நாடு முழுவதும் பெய்யும் மழையின் வீதத்தை அளக்க 444 மழைமானிகள் நிறுவப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், 44 அளவீட்டுத் தொகுப்புகளிலிருந்து வளிமண்டலவியல் திணைக்களம் எந்தவொரு தரவுகளையும் பெறவில்லை என்று இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஹப்புத்தளையில் மண்சரிவு: 05 குடும்பங்கள் வெளியேற்றம்

தொடர்ந்து பெய்துவரும் பலத்த மழை காரணமாக ஹப்புத்தளை பிரதேசத்தில் மண்சரிவு ஏற்பட்டுள்ளதாக ஹப்புத்தளை பிரிவு கிராம அதிகாரி ஜகத் லியனகே தெரிவித்துள்ளார்.

அப்பிரதேசத்தில் வசிக்கும் 05 குடும்பங்கள் தற்காலிகமாக வெளியேற்றப்பட்டு, உறவினர் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

குறித்த அனர்த்தத்தினால் ஒரு ஏக்கர் நிலப்பரப்பு மட்டுமே பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் இந்த இடத்தை ஆய்வு செய்யவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பிலான மேலதிக நடவடிக்கைகளை தேசிய கட்டட ஆராய்ச்சி நிலையம் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# விற்பனையான தனது வாகனத்தை திருடிய உரிமையாளர் கைது

நீண்டகாலமாக பயன்படுத்திய வாகனத்தை, பணத்தேவை காரணமாக விற்பனை செய்த நபர், அந்த வாகனத்தை வாங்கியவரிடமிருந்து திருடிச் சென்ற பின்னர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பெலிஹூல் ஓயா பகுதியைச் சேர்ந்த 52 வயதுடைய ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளதாக அத்துருகிரிய பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சில மாதங்களுக்கு முன்னர் இந்த நபர் தனது வாகனத்தை அத்துருகிரிய ஹொரஹேன பிரதேசத்தில் உள்ள தனியார் பஸ் உரிமையாளருக்கு 18 இலட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்துள்ளார்.

ஆனால், சில மாதங்களின் பின்னர் சந்தேகநபர் தனது வாகனத்தில் ஆசை கொண்டுள்ளார்.

சில நாட்களுக்கு முன்னர் அத்துருகிரிய ஹொரஹேன பகுதிக்கு மோட்டார் சைக்கிளில் வந்த அவர், வாகனத்தை வாங்கிய வர்த்தகர் வீட்டின் பக்கவாட்டு வீதியில் மோட்டார் சைக்கிளை மறைத்து வைத்து விட்டு, வர்த்தகரின் வீட்டுக்குள் நுழைந்துள்ளார். வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்தை திருடிக்கொண்டு அங்கிருந்து சென்றுள்ளார்.

மறுநாள் காலை எழுந்ததும் வாகனத்தை காணாமல் திகைப்படைந்த வர்த்தகர், அத்துருகிரிய பொலிஸாரிடம் அளித்த புகாரின் பேரில், பொலிஸார் வந்து வீட்டை சுற்றி பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கெமராக்களை சோதனையிட்டனர்.

இதன்படி, மறைத்து வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை எடுத்துச் செல்ல சந்தேகநபர் மீண்டும் வருவார் என நம்பிய பொலிஸார், அப்பகுதியில் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்த நிலையில் சந்தேகநபர் மோட்டார் சைக்கிளை எடுத்துச் செல்ல வந்தபோதே கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரிடமிருந்து கிடைத்த தகவலுக்கு அமைய, திருடப்பட்ட வாகனம் பெலிஹூல் ஓயா பிரதேசத்தில் உள்ள வெறிச்சோடிய தோட்டத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அன்புடன் கவனித்த வாகனத்தை பணப்பிரச்சினையால் விற்பனை செய்தேன், வாகனத்தை பிரிய மனமில்லாமல் அதனை திருடினேன் என விசாரணையில் தெரிவித்துள்ளார்.

## அரச ஊழியர்களுக்கு...

ஈடுபடுவதற்கு ஒப்பந்தம் செய்து கொண்ட ஊழியர்களுக்கு இந்த விதிமுறை பொருந்தக் கூடாது என்றும் புதிய வேலைவாய்ப்புச் சட்டமூலம் பரிந்துரைத்துள்ளது.

மேலும், புதிய வேலைவாய்ப்புச் சட்டமூலம், பணியின் தன்மை மற்றும் பயன்பாட்டுத் தேவையைப் பொறுத்து, பணி வழங்குனர் மற்றும் பணியாளரின் விருப்பத்தின் அடிப்படையில், சேவை ஒப்பந்தத்தின்படி, ஓய்வு பெறும் வயதை 55 முதல் 60 வயது வரை நீடிக்க அனுமதிக்கவும் பரிந்துரை செய்துள்ளது.

### விசேட கலந்துரையாடல்

தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, தற்போதுள்ள விதிமுறைகளுடன் கூடிய புதிய வேலைவாய்ப்புச் சட்டத்தை தயாரிப்பதற்கான அமைச்சரவை பத்திரத்தை சமர்ப்பித்துள்ளார்.

மேலும், சட்டத்தை உருவாக்குவது தொடர்பிலான விசேட கலந்துரையாடல் பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில், அமைச்சர் மனுஷ நாணயக்கார மற்றும் நாட்டின் பிரதான தொழிற்சங்கங்களின் தலைவர்கள் பங்களிப்புடன் அலரி மாளிகையில் நடைபெற்றது.

அந்த விவாதங்களின்படி தயாரிக்கப்பட்ட பரிந்துரைகள் அடங்கிய புதிய வேலைவாய்ப்பு சட்டமூலம் தொடர்பான முன்மொழிவுகளை பிரதமர் தினேஷ் குணவர்தன அமைச்சரவைக்கு அனுப்பி வைத்துள்ளார்.

## பூஸா சிறையிலிருந்து...

பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் விசேட தேடுதல் நடவடிக்கையின் போதே இவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

ஏ மற்றும் டி பிரிவுகளில் 02 கையடக்கத் தொலைபேசிகள் சிம் அட்டைகளுடன் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவற்றை தவிர, 2 சிம் அட்டைகள் மற்றும் வெளிப்புற உறை அகற்றப்பட்ட 2 சார்ஜர்கள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

## மேற்கு கடலில்...

தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவர் (நாரா) மற்றும் ருஹுணு பல்கலைக்கழகத்தின் பிரதிநிதிகளுடன் இணைந்து கடல்சார் ஆய்வு மேற்கொள்ளப்படும் என அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

"சியாங் 6 ரக கப்பலில் இலங்கை கடற்படை அதிகாரிகள் கண்காணிப்பாளர்களாக இருப்பார்கள்" என்று பேச்சாளர் மேலும் கூறினார்.

சீன ஆராய்ச்சிக் கப்பல் சியாங் 6 கடந்த புதன்கிழமை இலங்கையின் கொழும்பு துறைமுகத்தில் நிறுத்தப்பட்டது.

## போதையில்...

மதுபோதையில் வாகனம் செலுத்தி 02 வாகனங்களுக்கு விபத்தை ஏற்படுத்திய சம்பவம் தொடர்பில் வெள்ளவத்தை பொலிஸாரால் நேற்றுமுன்தினம் (28) இரவு ரவி செனவிரத்ன கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ரவி செனவிரத்னவின் வாகனம் மற்றொரு காருடன் மோதியதோடு சுற்றுலா பஸ் ஒன்றின் மீதும் மோதியுள்ளது.

## டலஸ் தலைமையில்...

விவாதித்து வருவதால், அந்த குழுவின் ஒற்றுமைக்கு இடையூறாக இருப்பதாக தெரிவித்து, அந்த நடவடிக்கைகளை டலஸ் அலகப்பெரும தலைமையின் கீழ் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலிலோ அல்லது பொதுத் தேர்தலிலோ எதிர்க்கட்சிகளின் பொதுக் கூட்டணியுடன் போட்டியிடுவது தொடர்பில் அந்தக் குழுவின் கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், அதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கையாக இந்தப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அறியமுடிகிறது.

பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அலகப்பெரும கலந்துரையாடலில் கலந்து கொண்டால், அதன் முன்னேற்றம் குறித்து உறுப்பினர் குழுவுக்கு தெரியப்படுத்துவார் என குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

## மருந்துகள்...

சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என அந்த சங்கத்தின் பொதுச் செயலர் எஸ்.பீ.மெதிவத்த குறிப்பிட்டுள்ளார்.

சுகாதாரத் துறையில் நிலவும் வெற்றிடங்களை உடனடியாக நிரப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, சுகாதாரத்துறையில் நிலவும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு தற்போதைய அமைச்சர் தலையிட வேண்டும் என அரச சேவை ஐக்கிய தாதியர் சங்கத்தின் தலைவர் முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, இலங்கை அரச மருந்தக கூட்டுத்தாபனத்தின் ஊடாக 2022ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட 09 மருந்து வகைகளில் பாரிய சிக்கல்கள் காணப்படுவதாக கணக்காய்வு அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளதாக மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான வைத்தியர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இதன்காரணமாக 156 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான நட்டம் ஏற்பட்டுள்ளதாக அதன் தலைவர் விசேட வைத்திய நிபுணர் சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார். கடந்த வருடம் கொள்வனவு செய்யப்பட்ட சில மருந்து வகைகளின் தரம், காலாவதி திகதி உள்ளிட்ட சில விடயங்களில் சர்ச்சைகள் உள்ளதாக அந்த கணக்காய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மோசடியில்...

குழுவின் முன்னாள் தலைமை நிர்வாக அதிகாரி கிறிஸ்டோபர் டூலியும் வரி மோசடிக்கு உடந்தையாக இருந்ததற்காக சிறைத்தண்டனையும் அபராதமும் விதிக்கப்பட்டார்.

இதேவேளை, சுபாஸ்கரன் அல்லிராஜாவுக்குச் சொந்தமான லைக்கா மொபைல் நிறுவனம், இந்தத் தீர்மானத்துடன் உடன்படவில்லை என்றும் மேன்முறையீடு செய்திருப்பதாகவும் கூறியுள்ளது.

2014 மற்றும் 2016க்கு இடையில் 17 மில்லியன் யூரோக்களை உள்ளடக்கிய "சிக்கலான மற்றும் விரிவான பணமோசடி முறைகளில் நிறுவனங்கள் தெரிந்தே பங்கேற்றுள்ளன" என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இந்த அமைப்பில் தொடர்ச்சியான ஷெல் நிறுவனங்கள், இரண்டு லைக்கா மொபைல் விற்பனையாளர்கள் மற்றும் பாரிஸ் லா சப்பலின் மறுவிற்பனையாளர்கள் ஈடுபட்டுள்ளனர் என்று அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இது சட்டவிரோதமாக ஊழியர்களுக்கு ஊதியம் வழங்கக் கோரும் சட்டுமான நிறுவனங்களின் நலனுக்காக இயங்கியது.

"பணமோசடி குற்றச்சாட்டுகள் இரண்டு விற்பனையாளர்களின் செயற்பாடுகளைப் பற்றியது. அவர்கள் இந்த இணையான செயற்பாட்டைக் கண்டுபிடித்தவுடன் பணிநீக்கம் செய்யப்பட்டனர்" என்று லைக்கா மொபைல் நிறுவனம் கூறியுள்ளது. Lycamobile Services நிறுவனத்துக்கு 03 மில்லியன் யூரோக்கள் மற்றும் Lycamobile பிரான்ஸுக்கு 7 மில்லியன் யூரோக்கள் அபராதம் விதிக்கப்பட்டது.

டூலிக்கு மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனையும் 250,000 யூரோ அபராதமும் விதிக்கப்பட்டது. அவர் ஐந்து ஆண்டுகளுக்கு வணிகத்தை நிர்வகிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. குழுவின் மற்ற பிரிட்டிஷ் தலைவர் ஆண்ட்ரூ (இங்கிலாந்து) விடுவிக்கப்பட்டார்.

பிரான்சில் Lycamobileஇன் பொது முகாமையாளர், Alain Jochimek, வழக்கின் இரு பகுதிகளிலும் மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார்.

அவருக்கு 120,000 யூரோக்கள் அபராதம் விதிக்கப்பட்டது. மேலும் அவர் ஐந்து ஆண்டுகளுக்கு வர்த்தகம் நடத்தவும் தடை விதிக்கப்பட்டது.

# தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 13 ஆம் நாள் திங்கட்கிழமை**

தேவையற்ற கவலைகளை விட்டுவிட்டு மகிழ்ச்சியுடன் இருங்கள். உடல் நலத்தை பார்த்துக் கொள்ளுங்கள்.

வீணான டென்ஷன் வேண்டாம். உங்கள் பணம் பொருள்களை பத்திரப்படுத்திக் கொள்ளுங்கள்.

தொட்டது துலங்கும் நாள். மன அமைதியுடன் அனைத்தையும் சாதிப்பீர்கள். வெற்றியுடன் வீடு திரும்புவீர்கள்.

பயணங்களால் சிரமங்களை அனுபவித்தாலும் தேவைக்கான பண வரவு உண்டு. சுறுசுறுப்பாக செயற்படுங்கள்.

எதிர்பாராத சுப செய்தியால் மன மகிழ்ச்சி கொள்வீர்கள். தெய்வ தரிசனம்செய்து கொள்வீர்கள்.

மௌனம் காப்பதே சிறந்தது. யாருடனும் விதண்டா வாதம் செய்ய வேண்டாம். கோபத்தைக் குறைத்துக் கொள்ளுங்கள்.

உடல், மனம் சோம்பிக்காணப் படும். வீண் டென்ஷன் வேண்டாம். தொழில் விடயத்தில் அக்கறையோடு செயல்படுங்கள

தொழிலிடத்திலுள்ள பெண் உத்தியோத்தர்களால் இலாபங்கள் உண்டு.காதல் களியாட்டங்களில் ஈடுபடுவீர்கள்.

தேவைக்கேற்பப் பணம் ஏதோ வழியில் வந்து மகிழ்விக்கும் குழப்பமற்ற மனதுடன் சேவையாற்றுவீர்கள்.

திட்டமிட்டப் பயணங்களால் இலாபம் உண்டு. தாய் மற்றும் தாய்வழி உதவிகள்,வாகன சுகம் உண்டு.

புத்தி சாதுர்யமாக அனைத்திலும் வெற்றி காண்பீர்கள்.அத்தியாவசியச் செலவுகள் இருக்கும்.

திடீர் பண வரவுக்கான வாய்ப்பு உள்ளது. வாதத் திறமையை காட்டுவீர்கள். குடும்ப சுகம் உண்டு.

**திதி:**துவிதியை பி.ப.10.23 வரை பின் திருதியை
**நட்சத்திரம்:**கார்த்திகை பி.ப.4.01 வரை பின்னர் ரோஹிணி
**யோகம்:**அமிர்தசித்த யோகம் பி.ப.4.01 வரை பின் சித்த யோகம்
**வார சூலை:**கிழக்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது
**நல்ல நேரம்:**பி.ப. 11.57 – 12.27 மணிவரை
**ராகுகாலம்:**7.27 – 8.57 மணி வரை
**எமகண்டம் :**10.27 – 11.57 மணி வரை
**குளிகை:**1.27 – 2.57 மணி வரை
**சந்திராஷ்டமம்:**கன்னி-துலாம் ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்
**தன அதிஷ்டம்:** பரணி,பூரம்,பூராடம் (பிறந்தவர்களுக்கு)
**விஷேட தினம்:** -------

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525326
078-6759739

# நாட்டில் 30 ஆபத்தான மேம்பாலங்களும் 400 பாதுகாப்பற்ற ரயில் கடவைகளும்

## அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவிப்பு



நாட்டில் 30 ஆபத்தான மேம்பாலங்களும் 400 பாதுகாப்பற்ற ரயில் கடவைகளும் காணப்படுவதாக ஊடகத்துறை,போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

பம்பலப்பிட்டி ரயில் நிலைய மேம்பாலத்துக்கான தற்காலிகப் படிகளை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து பேசிய அவர்,

மேம்பாலங்களை நிர்மாணிப்பதாயின் 350 மில்லியன் ரூபா தேவைப்படுகிறது. இருப்பினும் 200 கோடி ரூபாயே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.மேலும் இவற்றை புனரமைக்க போதுமான நிதி இல்லை. நிதியை ஈட்டுவதற்கான பிரதான மூலம் வரியை அதிகரிப்பதாகும்.பம்பலப்பிட்டி ரயில் நிலையத்துக்கு செல்லும் மேம்பாலம் சேதமடைந்துள்ளதால் அதனை புனர்நிர்மாணம் செய்வதற்காக ஜனாதிபதியால் 50 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன் அதன் நிர்மாணப்பணிகளும் முன்னெடுக்கப் பட்டுள்ளன.அத்தோடு ஆபத்தான பாலங்களை நிர்மாணிப்பதற்காக 200 கோடி ரூபாவுக்கும் மேல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆபத்தான பாதுகாப்பற்ற ரயில் கடவைகள் நாட்டில் 400 காணப்படுகின்றது. அவற்றுள் ஒன்றை திருத்துவதற்கு 40 முதல் 60 இலட்சம் ரூபா தேவைப்படுகிறது.பாதுகாப்பற்ற ரயில் கடவைகள் மூலம் பல உயிர்ச்சேதங்கள் இடம்பெறுகின்றன எனவும் அவர் குறிப்பிட்டார்.

# திருமண நிகழ்வில் உணவு உட்கொண்ட யுவதி ஒவ்வாமையால் உயிரிழப்பு

ரஸீன் ரஸ்மின்



புத்தளத்தில் தனது நண்பியின் திருமண நிகழ்வில் கலந்துகொண்ட இளம் யுவதியொருவர் திடீரென சுகயீனமடைந்த நிலையில் வெள்ளிக்கிழமை (27) அதிகாலை உயிரிழந்துள்ளார்.

ஆனமடுவ, தசநாயக்க புரத்தைச் சேர்ந்த அயோத்திய தேசானி (வயது 20) யுவதியே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.இந்த சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

உயிரிழந்த மாணவி கடந்த வருடம் உயர்தரப் பரீட்சை எழுதியவர் எனவும் புத்தளத்தில் உள்ள தனது நண்பியின் திருமண நிகழ்வில் கலந்துகொள்வதற்காக வியாழக்கிழமை (26) இரவு புத்தளத்துக்கு வருகை தந்துள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

திருமண நிகழ்வில் முழுமையாக கலந்து கொண்ட யுவதி, திருமண விருந்தை சாப்பிட்டதன் பின்னர் தனது உடல்நிலை சரியில்லை எனவும் உடனடியாக தான் வீட்டுக்குச் செல்ல வேண்டும் எனவும் நண்பியிடம் கூறிவிட்டு, அங்கிருந்து முச்சக்கர வண்டி ஒன்றில் தனது வீட்டுக்குச் சென்றுள்ளார்.

இவ்வாறு முச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருக்கும் போது குறித்த யுவதி திடீரென சுகயீனமடைந்ததுடன் அவர் உடனடியாக புத்தளம் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட குறித்த யுவதிக்கு சிகிச்சை அளிக்கப்பட்ட போதிலும், அந்த யுவதி வெள்ளிக்கிழமை அதிகாலை 2 மணியளவில் உயிரிழந்துள்ளார் என புத்தளம் பகுதிக்கான திடீர் மரண விசாரணை அதிகாரி பதுர்தீன் முஹம்மது ஹிஸாம் தெரிவித்தார்.

உயிரிழந்த யுவதியின் சடலம் மீதான மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனையின் பின்னர், சடலம் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

மேலும், உயிரிழந்த யுவதியின் சில உடல் அவையவங்கள் இரசாயன பகுப்பாய்வுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், அதன் பின்னரே மரணத்துக்கான காரணத்தை தெரிவிக்க முடியும் எனவும் புத்தளம் பகுதிக்கான திடீர் மரண விசாரணை அதிகாரி பதுர்தீன் முஹம்மது ஹிஸாம் மேலும் தெரிவித்தார்.

# கொழும்பு நகர எல்லைக்குள் 400 ஆபத்தான மரங்கள்

## பேராதனை தாவரவியல் பூங்கா நிபுணர் அறிக்கை



கொழும்பு நகர எல்லைக்குள் இருக்கும் ஒரு இலட்சம் மரங்களில் 400 மரங்கள் ஆபத்தான நிலையில் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. அதில் 06 மரங்கள் திடீரென விழக் கூடியவையாகும்.

இது தொடர்பாக ஆராய்வதற்காக பேராதனை தாவரவியல் பூங்காவில் 30 வருடங்கள் அனுபவம் வாய்ந்த தாவரவியலாளர் ஒருவர் கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு மாநகர சபையின் பரிசோதனை பிரிவின் பணிப்பாளரான திருமதி தரங்கா குணவீர இது தொடர்பில் குறிப்பிட்டதாவது,

சுனில் சுமகே என்ற விசேட நிபுணர், கொழும்பு மாநகர சபை சூழலியல் அதிகாரிகளுடன் இணைந்து நடத்திய பரிசோதனையில் 06 பெரிய மரங்கள் திடீரென விழக்கூடிய கடும் ஆபத்தான நிலையில் இருப்பதாக கண்டறிப்பட்டுள்ளது.இந்த மரங்கள் உடனடியாக அகற்றப்பட வேண்டியவையாகும்.

இவ்வாறான ஆபத்தான மரங்கள் அதிகளவில் கொழும்பு 2 பகுதியில் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்தோடு ஆபத்தான 35 மரங்கள் கொழும்பு நகர எல்லைக்குள் இருப்பதாக பொலிஸாரும் அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

அண்மையில் கொள்ளுப்பிட்டி பகுதியில் மரம் ஒன்று முறிந்து பஸ்ஸின் மீது வீழ்ந்த சம்பவத்தை யடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

# பிரித் வீட்டுக்கு வந்த தேரர் மீது தாக்குதல்; பொலிஸார் இருவர் உட்பட ஐவர் வைத்தியசாலையில்



அப்துல்சலாம் யாசீம்

கெப்பித்திக்கொள்ளாவ, குறுலுகம கிராமத்தில் உயிரிழந்த ஒருவரின் ஏழாம் தின நிகழ்வில் கலந்து கொள்ள வருகை தந்த பௌத்த பிக்குவுக்கு அதே கிராமத்தில் வசித்து வரும் விகாரையின் விகாராதிபதிமற்றும் கிராம மக்கள் சிலர் எதிர்ப்புத் தெரிவித்து பிரித் ஓதும் வீட்டை முற்றுகையிட்டு பௌத்த தேரரை தாக்கியுள்ளனர்.

இதனையடுத்து இச்சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்ததையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், பௌத்த பிக்குவை அனுப்பி வைக்க முற்பட்ட போது ஊர் மக்கள் பொலிஸாரை தாக்கியதுடன் கடமைக்கும் இடையூறு விளைவித்துள்ளனர்.

இதனையடுத்து விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் குறுலுகம ரஜமஹா விகாரையின் விகாரதிபதியான (30 வயது) ரஞ்சனவா கே சுதவன்ச தேரரை கைது செய்துள்ளனர்.

இதேவேளை குறித்த சம்பவத்தில் இரண்டு பொலிஸார் உட்பட பௌத்த பிக்கு ஒருவரும் காயமடைந்த நிலையில் கெப்பித்திக்கொள்ளாவ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரியவருகின்றது.

குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக கெப்பித்திக்கொள்ளாவ பொலிஸார் தெரிவித்தனர்.

# டுபாயிலிருந்து பொலிஸ் கான்ஸ்டபிளுக்கு கொலை மிரட்டல்

நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தில் பணிபுரியும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவருக்கு டுபாயில் இருக்கும் பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த ஒருவர்,தன்னையும் தனது குடும்ப அங்கத்தவர்களையும் கொலை செய்வதாக தொலைபேசியில் மிரட்டியுள்ளதாக நீர்கொழும்பு தலைமையகப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

டுபாய்க்கு தப்பிச் சென்ற தாகொன்னே கிரியா என்ற நபரே கொலை மிரட்டல் விடுத்துள்ளதாகவும் தொலைபேசி இலக்கமும் முறைப்பாட்டில் குறிப்பிடப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த பொலிஸ் கான்ஸ்டபிள் தற்போது குருநாகல், வெஹர பயிற்சி பிரிவில் கற்கை நெறி ஒன்றை பயின்று வருவதாகவும் அங்கிருக்கும் போதே கொலை அச்சுறுத்தலுக்கான அழைப்பு வந்துள்ளதாகவும் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# பாடசாலைக்குள் புகுந்து மாணவனை தாக்கிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது

கனகராசா சரவணன்

மட்டக்களப்பு நகரிலுள்ள பிரபல ஆண்கள் பாடசாலையில், தனது மகனை தாக்கிய இருமாணவர்களுக்கு பதிலாக வேறு ஒரு மாணவன் மீது தாக்குதல் மேற்கொண்டதில் அம்மாணவன் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக நீதிமன்றில் கடமையாற்றிவரும் ஒருவரை நேற்று முன்தினம் (28) கைது செய்துள்ளதாக மட்டு தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பாடசாலையில் தரம் 9ல் கல்விக் கற்றுவரும் மாணவர் ஒருவர் மீது சக இரு மாணவர்கள் தாக்கியுள்ளதாக பாதிக்கப்பட்ட மாணவன் தனது பெற்றோரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்நிலையில் சம்பவதினமான வெள்ளிக்கிழமை (27) பாதிக்கப்பட்ட மாணவனின் தந்தையார் நீதிமன்றத்தில் கடமையாற்றி வரும் இவர், பாடசாலைக்குள் புகுந்து தனது மகனை தாக்கிய இரு மாணவர்களுக்கு பதிலாக மாறுதலாக வேறு ஒரு மாணவன் மீது தாக்குதல் நடத்தியதையடுத்து காயமடைந்த நிலையில் அம்மாணவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட மாணவரின் பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டையடுத்து இடம்பெற்ற விசாரணையின் அடிப்படையில்,தாக்கியவர் சனிக்கிழமை கைது செய்யப்பட்டார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு. தலைமையகப் பொலிஸ் நிலைய பெண்கள், சிறுவர் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.




அகில இலங்கை தமிழ் தினப் போட்டி 2023 எழுத்தாக்கம், இலக்கணப் போட்டிப் பிரிவு நான்கில், இரத்தினபுரி தமிழ் மகா வித்தியாலய மாணவி செல்வி ஜீ.ஹர்ஷனா இரண்டாம் நிலையை பெற்றுள்ளார். (படங்கள்: சரத்குமார்)

# அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனத்தின் பொன் விழா மாநாடு




அஷ்ரப் ஏ. சமத்

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனத்தின் 50ஆவது வருட பொன் விழா மாநாடு நேற்று ( 29) சம்மேளனத்தின் தலைவர் லுக்மான் சஹாப்தீன் தலைமையில் கொழும்பு 7ல் உள்ள விளையாட்டு அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இம் மாநாட்டுக்கு எதிர்க்கட்சித் தலைவர் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமசிங்க, இந்திய லோக் சபாவில் தமிழ் நாட்டுக்கான பாராளுமன்ற உறுப்பினர் கே.நவாஸ் கனி, இலங்கைக்கான பலஸ்தீன தூதுவர் கலாநிதி சுஹைர் ஹம்துல்லாஹ் செய்யிட் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பொன் விழா மாநாட்டை முன்னிட்டு தபால் திணைக்களத்தினால் 25 ரூபா முத்திரையும் ஞாபகார்த்த தபால் உறையும் வெளியிட்டு வைக்கப்பட்டது. தபால் உறையின் முதற்பிரதி முன்னணியின் ஸ்தாபகத் தலைவர், முன்னாள் சபாநாயகர் மர்ஹூம் பாக்கீர் மாக்காரின் புதல்வரும் பாராளுமன்ற உறுப்பினருமான இம்தியாஸ் பாக்கீர் மாக்காரிடம் தபால் மா அதிபர் கையளித்தார்.

மேலும் முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனத்தினால் தெரிவு செய்யப்பட்ட , ஜனாதிபதி சட்டத்தரணி எம்.எம். சுஹைர், சம்மேளனத்தின் முன்னாள் தேசியத் தலைவர்களான என்.எம். அமீன், சிரேஷ்ட சட்டத்தரணிகளான என்.எம். சஹீட், ரசீட் எம். இம்தியாஸ், அக்கரைப்பற்று எம். ஐ. உதுமாலெப்பை, கலாநிதி பி.எம். பாருக் ஆகியோர் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டதோடு,பொன்விழாவினை முன்னிட்டு வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் சம்பந்தமாக நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான்,பாராளுமன்ற உறுப்பினர்களான ஏ.எச்.எம்.பௌஸி, அலி சாஹிர் மௌலானா,பேராசிரியர் திஸ்ஸ விதாரன, பங்களாதேஷ், இந்தோனேசியா, ஈரான், லிபியா மற்றும் மலேசியா போன்ற நாடுகளின் தூதுவர்களும் சமுகமளித்திருந்தனர். அத்துடன் 20 மாவட்டங்களது முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனத்தின் கிளைகளின் பிரதிநிதிகளும் சமுகமளித்த நிகழ்வில் பொன் விழா மலரும் வெளியீட்டு வைக்கப்பட்டது.

# சுகாதாரத் துறையில் நிலுவைகளை செலுத்த நிதியமைச்சு தீர்மானம்

சுகாதாரத் துறையில் ஒரு மாதத்துக்கும் மேலாக பணம் செலுத்தாமல் நிலுவையில் உள்ள கட்டணங்களை செலுத்த தீர்மானிக்கப் பட்டுள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது. மருந்துக் கொள்வனவு, நிலுவைத் தொகை செலுத்துதல் போன்ற அத்தியாவசிய சுகாதாரச் செலவுகளுக்கு எவ்வித தாமதமும் இன்றி பணம் வழங்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.மருந்துகளை கொள்வனவு செய்வதற்காக பல்வேறு விநியோகஸ்தர்களுக்கு அரச மருந்தக கூட்டுத் தாபனம் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையை செலுத்துவதற்கு விசேட அமைச்சரவை அங்கீகாரத்தின் கீழ் நிதியை ஒதுக்க தேசிய வரவு செலவுத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

# பஸ்ஸை நிறுத்தி போதை அருந்திய சாரதி கைது

பூகொடையில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த தனியார் பேருந்தை தெல்கொட பகுதியில் பயணிகளுடன் நிறுத்திவிட்டு சாரதி போதைப்பொருள் அருந்திய சம்பவம் தொடர்பில் உள்ளக விசாரணை நடத்தப்பட்டு வருவதாக பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் கம்பஹா மாவட்ட அலுவலகம் தெரிவித்துள்ளது.

குறித்த பஸ்ஸின் பயணிகள் போக்குவரத்து தற்காலிகமாக இடைநிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் கம்பஹா மாவட்ட முகாமையாளர் திலக் வீரசிங்க தெரிவித்தார்.

சாரதி போதைப்பொருள் உட்கொண்டதாக பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் பயணிகளுடன் பஸ் ஒன்று நிறுத்தப்பட்டு சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.






நுகேகொடை தமிழ் மகா வித்தியாலயத்தின் வாணி விழா அதிபர் திருமதி தயாபரன் தலைமையில் நடைபெற்றது.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 012 67 34 42.
தொலைபேசி : 015 200 900/ 015 88 61 87
விளம்பரம் : 014 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2023 ஒக்டோபர் 30ஆம் திகதி, திங்கட்கிழமை

# இந்திய இராஜதந்திரத்துக்கு வரும் தொடர் பின்னடைவு

இந்திய அரசின் அண்மைக்கால செயற்பாடுகளை நோக்குகையில் அந்நாட்டுக்கு சர்வதேச ரீதியில் தொடர் பின்னடைவுகள் ஏற்பட்டு வருவதை காணமுடிகிறது.

வெளிநாட்டு இராஜதந்திர செயற்பாடுகள் இந்திய வரலாறில் என்றுமில்லாதவாறு பின்னோக்கி நகர்வதாகத் தெரிகிறது. சீனா - பூட்டான் பேச்சு ஒருபக்கம்.பூட்டான் வெளியுறவு அமைச்சர் டாண்டி டோர்ஜி, கடந்த வாரம் மேற்கொண்ட சீனப் பயணம், பல மட்டங்களில் முன்னெப்போதும் இல்லாத வகையில் இருந்தது. பூட்டானுக்கும் சீனாவுக்கும் இடையில் தூதரக உறவுகள் இல்லை. பூட்டான் வெளியுறவு அமைச்சர் ஒருவர் மேற்கொண்ட முதல் பயணம் இது. தவிர, ஏழு ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெறாத எல்லைப் பேச்சுவார்த்தையை நடத்துவதே இதன் முக்கிய நோக்கமாக இருந்தது. இந்த பேச்சுவார்த்தையில் குறிப்பிடத்தகுந்த முன்னேற்றம் இருந்ததாக சொல்கிறது ஒரு கூட்டறிக்கை. கூட்டிக்கழித்துப் பார்த்தால் இந்தியாவுக்கு இது பெருந்தாக்கம்.

அடுத்ததாக கனடாவுடனான மோதல் , மாலைதீவில் புதிய ஜனாதிபதியின் இந்திய எதிர்ப்பு நடவடிக்கை ,கட்டாரில் இந்தியர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள மரணதண்டனை என்று தொடர்கிறது .இதில் கட்டார் சம்பவத்தை இந்தியாவுக்கு விழுந்த இராஜதந்திர அடி என்றும் விளிக்கலாம்

தனது கடற்படையை வேகமாக விரிவுபடுத்தி வரும் சீனா, மாலைதீவில் தனது ஆதிக்கத்தை விரிவுபடுத்தும் முயற்சிகளை மேற்கொண்டு வரும் நிலையில் அதன் ஆதரவாளரான முஹம்மது முய்சு மாலைதீவு ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்றுள்ளார்.

பாகிஸ்தானின் குவாதர் துறைமுகத்தைப் போலவே மாலைதீவிலும் தனது கடற்படையை நிறுத்த சீனா முயல்கிறது. இந்த முயற்சியில் அதற்கு வெற்றி கிட்டினால் இந்தியப் பெருங்கடலில் அதற்கு இரண்டாவது தளம் கிட்டிவிடும் என்பதில் ஐயம் இல்லை.

கட்டார் விவகாரம் கூட இலேசாக விட்டுவிடக்கூடியதல்ல.உளவு பார்த்ததாக குற்றம் சாட்டப்பட்ட எட்டு இந்தியர்களுக்கு கட்டார் நீதிமன்றம் வியாழக்கிழமை அன்று மரண தண்டனை வழங்கியிருப்பது இந்திய வெளியுறவுத்துறை அமைச்சரவை ஒரு அறிக்கையில் சொல்லியிருப்பதுபோல "மிகவும் அதிர்ச்சியளிக்கும்" ஒரு விடயம்.

2022ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் கைது செய்யப்பட்ட முன்னாள் இந்திய கடற்படை வீரர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் மற்றும் ஆதாரங்கள் குறித்த மிகக் குறைந்த தகவல்களுடன் நடந்த இந்த விசாரணை மிக இரகசியமாகவே இருந்தது. அவர்களது குடும்பத்தினர் மற்றும் டோஹாவில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்த போதிலும் வழக்கு விவரங்களை வெளியிடாததற்கு என்ன காரணம் என்று கட்டார் சொல்லவில்லை. தீர்ப்புக்கூட இன்னும் இந்தியாவுடன் பகிர்ந்து கொள்ளப்படவில்லை.

தாங்கள் பணியாற்றிய ஸ்டெல்த் நீர்மூழ்கிக் கப்பல் திட்டம் தொடர்பான இரகசியத் தகவல்களை மூன்றாவது நாட்டுடன் பகிர்ந்து கொண்டதாக இவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த குற்றச்சாட்டுகளை அவர்களது குடும்பங்கள் மறுத்திருக்கின்றன. கருணையையும் வெளிப்படைத் தன்மையையும் கோரி இந்திய அதிகாரிகள் கட்டாருக்கு மேற்கொண்ட பயணங்கள் எந்தப் பலனையும் அளிக்கவில்லை. பாகிஸ்தானில் மரண தண்டனையை எதிர்நோக்கியிருக்கும் முன்னாள் கடற்படைத் தளபதி ஜாதவ் விவகாரத்துடன் இந்த வழக்குக்கு சில ஒற்றுமைகள் இருக்கலாம். ஆனால் ஒரு வித்தியாசம் இருக்கிறது. ஒப்பீட்டளவில் கட்டாருடனான இந்தியாவின் உறவுகள் நன்றாகவே இருக்கின்றன.

வியூகரீதியிலான ஒப்பந்தங்கள், பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தங்கள் தவிர, இந்தியா தனது எரிவாயு தேவைகளில் 40 சதவீதத்தை கட்டாரிடமிருந்து பெறுகிறது. கூடவே கட்டுமானம் மற்றும் புதிய உணவுப் பொருட்களுக்கான மூலப்பொருட்கள் இறக்குமதியில் கட்டாரின் மூன்றாவது பெரிய ஆதாரமாகவும் இந்தியா இருக்கிறது. 2017ல் கட்டாருக்கு எதிராக வளைகுடா தடை இருந்தபோதிலும் இந்த விநியோகங்கள் தொடர்ந்தன என்பது குறிப்பிடத்தக்கது. இந்தியா மீதான நல்லெண்ணத்தை இது உருவாக்கியிருக்க வேண்டும். கூடுதலாக, 7 இலட்சம் இந்தியர்கள் கட்டாரின் நிறுவனங்கள், தொழிற்றுறை மற்றும் பணியாளர்களின் ஒருங்கிணைந்த பகுதியாக இருக்கிறார்கள். இது போன்ற ஒரு தண்டனை, உறவுகளில் ஏற்படுத்தக்கூடிய விரிசல், இரு நாடுகளுக்கும் பாதகமாகவே இருக்கும். இதை இந்தியா கட்டாருக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

தற்போதைய இஸ்ரேல் - பலஸ்தீன மோதலில் அதன் கொள்கை குறித்து இந்தியாவுடன் கட்டாருக்கு இருப்பதாகச் சொல்லப்படும் கருத்து வேறுபாடுகள் உட்பட, இந்த தீர்ப்பை மேலும் புவிசார் அரசியல் பரிசீலனைகளுடன் பிணைக்க முயற்சிக்கும் நடவடிக்கைகள் ஒருபுறம் இருக்கின்றன. இஸ்ரேலுக்கு ஆதரவாக முன்னதாக இந்தியா வெளியிட்ட அறிவிப்பு கட்டாரின் இந்த தீர்ப்பில் தாக்கம் செலுத்தியிருக்குமாயின் அதுவும் ஆரோக்கியமானதல்ல.

எல்லாவற்றுக்கும் மேலாக இலங்கையில் சீனாவின் ஆதிக்க விடயத்தில் இந்தியா செலுத்திவந்த அழுத்தங்கள் எதுவும் கொழும்பில் எடுபடாமல் இருப்பதும் புரிகிறது.சீனாவின் ஆராய்ச்சிக்கப்பலை கொழும்பு துறைமுகத்துக்கு வருவதை தடுக்க புதுடில்லி எடுத்த முயற்சிகள் விழலுக்கிறைத்த நீராகி விட்டன.முன்னர் கொழும்பு அரசியலை தமிழ் அரசியல்வாதிகளைக் கொண்டு ஆட்டுவிக்கும் பாரம் இப்போது அதையும் கண்டுகொள்வதில்லை. அண்மையில் இலங்கை வந்திருந்த இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்துவிட்டு சென்றிருந்தார். ஆனால் இந்தியாவின் புகழ்பாடிக்கொண்டிருக்கும் தமிழ் அரசியல் தலைவர்களை அவர் ஏறெடுத்தும் பார்க்கவில்லை என்பது தனிக்கதை.தான் செய்வதெல்லாம் சரி, வெற்றியளிக்கும் என்று புதுடில்லி கருதிவிடக் கூடாது. சில நேரங்களில் தன்னை மீளாய்வு செய்துகொள்ளவேண்டும்.தனது கொள்கைகளை சீர்தூக்கி நோக்கி சுயபரிசோதனை செய்துகொள்ளுதல் வேண்டும்.இப்போது அந்த மீளாய்வுக்கான நேரம் வந்திருப்பதாகவே கருதவேண்டியுள்ளது.

## இன்றைய நாளில்...

- 1920 – அவுஸ்திரேலியக் கம்யூனிஸ்ட் கட்சி சிட்னியில் அமைக்கப்பட்டது.
- 1960 – முதலாவது வெற்றிகரமான சிறுநீரகக் கொடை ஐக்கிய இராச்சியத்தில் அளிக்கப்பட்டது.
- 1961 – சோவியத் ஒன்றியம் 50 மெகாதொன் அளவுள்ள சார் வெடிகுண்டு என்ற அணுகுண்டை வெடிக்க வைத்தது. இதுவே இந்நாள் வரை வெடிக்கப்பட்ட மிகப்பெரிய அணுகுண்டாகும்.
- 1961 – ஜோசப் ஸ்டாலினின் உடல் மொஸ்கோவின் கிரெம்ளினில் லெனின் நினைவகத்தில் இருந்து அகற்றுவதற்கு முடிவெடுக்கப்பட்டது.
- 1964 – இலங்கையின் மலையகத் தமிழர்களை இந்தியாவுக்கு நாடு கடத்தும் சிறிமா-சாஸ்திரி உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது.
- 2006 – ஜெனீவாவில் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் முறிவடைந்தன.
- 2014 – பலஸ்தீன நாட்டை சுவீடன் அங்கீகரித்தது. ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் பலஸ்தீனத்தை அங்கீகரித்த முதல் நாடு இதுவாகும்.

# மனிதனின் வாழ்க்கைக்கு அடித்தளமாக அமையும் முதலாம் நிலைக் கல்வி

"ஒன்று தொடக்கம் 5 வரையான வகுப்புகளைக் கொண்டமைந்த கல்வி நிலையாகக் காணப்படும் அதேவேளை, இக்கல்வி நிலையானது 1920 ஆம் ஆண்டில் முதல் இலங்க கட்டளைச் சட்டத்தின் கீழ் ஆரம்பக் கல்வி தொடர்பான ஒழுங்குவிதியின் கீழ் உட்பட்டவாறு உருவாக்கப்பட்டுள்ளது. 1929 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மீள வாய்ப்பட்ட விதிக் கோவையின் முதல்நிலை வகுப்பாக ஐந்தாம் தரத்தை முடிவெல்லையாகக் கருதி இக் கல்வி நிலையானது தீர்மானிக்கப்பட்டது. இலங்கை பாடசாலைக்கமைய கல்வித் திட்ட திணைக்களத்தினால் கல்வி பாடத் தொகுதி முறைத் திட்டம் மூலமாக வெளியிடப்பட்டன."

ஆரம்பக்கல்வி தன்னாங்கமானது மற்றும் முற்றிலும் தனிப்பட்ட ரீதியிலே செயற்படுத்தப்படுகின்றது. பெரும்பாலான பாடசாலைகள் நகர்ப்புறங்களில் உள்ளன. ஆரம்பக் கல்வியில் ஒன்று முதல் ஐந்து வரையான வகுப்புகள் அடங்கப்பட்ட நிலையில், கல்வியானது இலவசமாகவும் கற்பிக்கப்படுகின்றது. ஆனால், பாரம்பரியத்தின் படி 1999 ஆம் ஆண்டு வரை இலங்கை அரசாங்கம் சீர்திருத்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக ஆரம்பக் கல்வியை கட்டாயமாக்கும் புதிய விதிமுறைகளை ஸ்தாபிக்கும் வரை கட்டாயமாக இருக்கவில்லை. ஐந்து முதல் பத்து வயது வரை உள்ள குழந்தைகளின் 14 சதவீதமானோர் பாடசாலைக்கு சமுகமளிப்பதில்லை. பாடசாலை வருகையை உயர்த்திக் கண்காணிக்கும் அதிகாரத்துடன் கிராமக் குழுக்களுக்கு இப்போது அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. கல்வி கற்பதற்கு வருகையை ஊக்குவிக்கும் முகமாக மக்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களும் நடைபெற்று வருகின்றன.

இலங்கையில் 90 சதவீதமான பாடசாலைகளில் கல்வி கற்ற பிள்ளைகள் ஆரம்பக் கல்வியில் பயில்வதாக சமீபத்திய புள்ளி விபரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. தொடக்கக் கல்வியின் முதல் மூன்று ஆண்டுகளுக்கான பாடத்திட்டம் மதம், தாய் மொழி, ஆங்கிலம் மற்றும் எண்ணிக்கைகளாக அடங்குகின்றன. தரம் நான்கிலே அதே பாடங்கள் தொடரப்பட்ட நிலையில், உடற்கல்வி ஆக்கபூர்வமான செயற்பாடுகள் ஒரு பயனுள்ள பங்கை ஊக்குவிப்பதாகும். எனவே, 2003 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட கல்வியினுடைய இலக்குகளில் காணப்படும் தேர்ச்சிகளது முதலாம் நிலைக் கல்வியினுடைய முக்கியத்துவத்தை மேலும் வலுப்படுத்தியதாகவும் கூறப்படுகிறது.

இவ்வாறான முதலாம் நிலைக் கல்வியானது எதிர்கொள்கின்ற சவால்களாக, வளப் பற்றாக்குறை, பயிற்றப்பட்ட ஆசிரியர்களுடைய பற்றாக்குறை, பிள்ளைகளுடைய வரவின்மை, முன்பள்ளி ஆசிரியர்களுடைய பற்றாக்குறை, சமனற்ற பரம்பல், போஷாக்கின்மை மற்றும் குடும்ப சூழல், பரீட்சைகளை மாத்திரம் மையமாகக் கொண்ட கற்றல், இடைவிலகல், நிதி ஒதுக்கீடின்மை போன்ற பல்வேறுபட்ட சவால்களை அன்று தொடக்கம் இன்று வரை உள்ள முதலாம் நிலைக் கல்வியானது எதிர்கொண்டு வருகின்றது.

அந்த வகையில், பெரும்பான்மையான கல்வியாக எழுத்து கல்வி முறையே இன்றும் காணப்படுகின்றது. தன்னார்ந்த ரீதியில் அவர்களுடைய ஆற்றல்களை வெளிப்படுத்துமாறு காணப்படும் கல்வியானது தற்போதைய காலகட்டங்களில் பார்ப்பது மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. ஒன்று தொடக்கம் 5 வரையான ஆரம்பப் பாடசாலையானது ஐந்தாம் தரத்தில் நடைபெறுகின்ற புலமைப் பரிசில் பரீட்சையை மையமாகக் கொண்டது. பரீட்சைக்காகவே தரம் 3,4,5 இல் உள்ள மாணவர்களை புலமைப் பரிசில் பரீட்சையை எதிர்கொண்டே அவர்களுக்கு கல்வியானது புகட்டப்படுகின்றது.

எனவே, அத்தரங்களில் காணப்படுகின்ற மாணவர்களுக்கு இயற்கையான முறையில் அமையப்பெறும் கல்வியானது கிடைப்பதாகத் தெரியவில்லை.

இன்னும் மேலும் திறன்களை வளர்க்கவும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் தம்மை ஊக்குவிக்கவும் முயற்சி செய்யும் பொழுது பரீட்சைகளும் போட்டி சூழலும் இடையூறாகின்றன. எமது கல்வி முறையானது துறை ரீதியாக ஒழுங்கமைக்கப்படாததே இதற்குக் காரணமாகும். எண்ணறிவு, எழுத்தறிவு வளர்க்கப்படுவது ஆரம்பக் கல்வியினுடைய முக்கிய பங்கு. ஆனால், பிள்ளையின் எதிர்காலத்துக்கு சிறந்தது எது என்பது தொடர்பான அடிப்படை ஊக்கப்படுத்தல் கூட அங்கு இல்லை. எமது நாட்டைப் பொறுத்தமட்டில் பரீட்சையை மையமாகக் கொண்டு காணப்படும் கல்வி முறையானது இன்றுவரையிலும் அழியாத ஒன்றாகும். மேலும், உளரீதியாக மாணவர்களுடைய தாக்கமானது ஐந்தாம் தர புலமைப் பரிசில் ஊடாக விதைக்கப்படுவதனால் சிறு வயதில் அவர்களிடையே உள்ள இயற்கையாக வெளிப்படுத்தப்படுகின்ற ஆற்றல்களும் திறன்களும் முடங்கிக் கிடக்கின்றன.

மேலும் இயற்கையான திறன்களை வெளிப்படுத்துகின்ற விதமாக இலங்கையில் அநுராதபுரத்தில் அழகப்பெருமாளை பகுதியில் பிறந்த ஒன்றரை வயது பெண் குழந்தை ஒன்று உலக சாதனை படைத்துள்ளது. இப் பெண் பிள்ளையானது ஏழு நிமிடம் மற்றும் 6 விநாடிகளில் அதிக எண்ணிக்கையிலான பறவைகளை அடையாளம் கண்டு உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளது.

அதுமாத்திரமன்றி, இந்தியாவில் குழந்தை ஆரோகி, ஒன்றரை வயதில் அதிகபட்சமான படங்களை அடையாளம் கண்டு அதனுடைய பெயர்களையும் கூறி படங்களுடைய சிறப்பம்சங்களையும் எடுத்துரைத்துள்ளது. எனவே, குழந்தையும் உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளது. அது மட்டுமல்லாது, தேஜஸ் எனப்படும் மூன்று வயது ஆண் பிள்ளை 80 நாடுகளுடைய கொடி மற்றும் அந்நாடுகளினுடைய பெயர்கள் என்பவற்றைக் கூறி, இந்தியாவில் சேலம் பகுதியில் "கலாம் வேர்ல்ட்" சாதனை படைத்துள்ளது. இவற்றை நான் கூற முற்பட்டதன் விளைவு இப்பிள்ளைகள் சிறு



வயதிலிருந்து அவர்களுடைய தன்னார்வத் திறன்களை வெளிப்படுத்தியுள்ளனர். எனவே, அவர்கள் வளர்ந்து முதலாம் நிலைக் கல்வியைத் தொடருகின்ற பட்சத்தில் அவர்களுடைய திறன்கள் மேலும் மெருகேற்றப்பட வேண்டுமே தவிர, அத்திறன்களை அடக்கி வெறுமனே புத்தகப் படிப்பை மாத்திரம் ஊட்டுவது சிறப்பானதோர் காரியமா என நீங்களே கூற வேண்டும். எனவே, இவ்வாறான சிக்கல்களே இலங்கையின் முதலாம் நிலைக் கல்வியின் தற்கால சூழ்நிலை.

மேலும் சிங்கப்பூர், சீனா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளுடைய முதலாம் நிலைக் கல்வித் திட்டத்தை எடுத்து நோக்கும் பொழுது, அக்கல்வித் திட்டங்கள் அனைத்தும் வெறுமனே புத்தகப் படிப்பு அல்ல. அதற்குப் பதிலாக அவர்களுடைய உள்ளார்ந்த திறன்களை வெளிப்படுத்து முகமாக பல்வேறுபட்ட பாடத்திட்டங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. உதாரணமாக, நீச்சல், விளையாட்டுகள், உற்பத்திப் பொருட்களின் விற்பனைகள், சந்தைப் படுத்தல் போன்ற பல்வேறுபட்ட திறன்களை விருத்தி செய்யும் முகமாகவே அவர்களுடைய கல்வி நடவடிக்கையானது காணப்படுகின்றது. அதுமாத்திரமல்லாது, அது 7 வயதுக்குப் பிற்பட்ட காலப்பகுதியிலே முதலாம் நிலைக் கல்வியானது போதிக்கப்படுகின்றது. ஆனால், இலங்கையைப் பொறுத்தமட்டில் வெறுமனே புத்தகக் கல்வியானது "கிணற்றுத் தவளை போல்" எனப்படுகின்ற வாசகத்துக்கு ஒப்பாகக் காணப்படுகின்றது.

அது மாத்திரமில்லாது, ஆசிரியர்களுடைய பற்றாக்குறை மேலும் விரித்துக் கூறுவோமாயின் பயிற்றப்பட்ட ஒழுங்கான நெறிமுறைக்கு உட்பட்ட கற்றறிந்த ஆசிரியர்களுடைய பற்றாக்குறை. குறிப்பாக, நோக்குமிடத்தில் கிராமப் பகுதிகளில் காணப்படுகின்ற முதலாம் நிலைக் கல்வி தனிப்பட்ட ரீதியில் போதிக்கப்படுகின்ற அதாவது, இடைநிலைக் கல்வியோடு இணைப்பில் அல்லாத தன்னார்ந்த ரீதியில் காணப்படுகின்ற பாடசாலைகளில் குறிப்பாக, ஒன்று தொடக்கம் 5 வரையான தரங்கள் மாத்திரம் காணப்படும் பாடசாலைகளில் பற்றாக்குறை நிலவி வருவது மிகவும் வருந்தத்துக்குரியது. அப்பாடசாலைகளில் ஓர் ஆசிரியர் மூன்று தரங்களுக்கு வகுப்பாசிரியர்களாக செயற்பட்டு வருகின்ற அளவுக்கு பற்றாக்குறை. மேலும் ஒழுங்காக நெறிமுறைகளுக்கு உட்படுத்தப்பட்ட பாடத்திட்டங்களும் நடைமுறைப் படுத்தப்படுவதில்லை. தற்கால இலங்கையில் கிராமப் பகுதிகளில் காணப்படும் முதலாம் நிலைக் கல்வி இச்சவால்களையும் எதிர்கொள்கின்றது.

அடுத்த கட்டமாக பேசப்படுவது, வளங்களுடைய சமனற்ற பரம்பல் அதாவது, பாடசாலை அன்று தன்னார்ந்த ரீதியில் இயங்கப்பட வேண்டுமெனில், அதற்கு வளங்கள் என்பது முக்கியமான ஒன்று. முற்கால கட்டத்தில் இருந்து தற்காலம் வரை வளங்களினுடைய பற்றாக்குறையானது பேசப்படும் ஒரு பொருளாக மாறி வருகின்றது. பெரிதும் கூறப்போனால் கிராமப்புற பாடசாலைகளை இவ்வாக்கியத்தின் பேசு பொருள் பிள்ளைகள் கற்கக்கூடிய மேசை, கதிரைகளாகட்டும் மேலும் அவர்கள் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் ஈடுபடக்கூடிய விளையாட்டுப் பொருட்களாகட்டும் கட்டட வசதிகளாகட்டும் என பல்வேறுபட்ட வளங்களினுடைய தட்டுப்பாடானது தற்கால முதலாம் நிலைக் கல்வியை எதிர்கொள்கின்ற மாணவர்களுக்கு ஒரு பாரிய நெருக்கடிக்கு உண்டான சவால்கள் எனலாம். இச்சவால்கள் எவ்வாறு நிவர்த்தி செய்யப்படப் போகின்றன எனக் கேட்டால் அதற்கு கேள்விக்குறியே விடையாகக் காணப்படும். ஏனெனில், கூடியளவு அபிவிருத்தியடைந்து வரும் இலங்கையானது கல்வியினுடைய அபிவிருத்தியில் இப்படிப்பட்ட பல்வேறுபட்ட சிக்கலுக்கு உண்டான கிராமப்புறப் பாடசாலைகளை எதிர்கொண்டு சிக்கல்களை நிவர்த்தி செய்வார்களாயின் எதிர்காலத்தில் முதலாம் நிலைக் கல்வி சவால் எனக் கூறக்கூடிய வளப்பற்றாக்குறை இல்லாதொழியும்.

இவ்வாறு சவால்களை அடுக்கிக்கொண்டு செல்கின்ற வேளையில், போஷாக்கின்மை மற்றும் குடும்ப சூழல் சவாலானது மிகவும் முக்கியமானது.

காலையில் எழுந்து மாணவன் ஒருவன் பாடசாலைக்கு செல்கின்ற பொழுது அவன் காலை உணவு உட்கொள்ளாமல் பாடசாலைக்கு சமுகமளிப்பானானால் அவனால் காலை ஆராதனையில் கூட முழுமையாகப் பங்குபெற்ற முடியாது. அதனையடுத்து பாடத்தில் முழுமையான கவனத்தைச் செலுத்த முடியாது. ஒரு பதகளிப்பு பின் தங்கள் நடத்தையில் மாற்றம் என்பன அவன் மேல் ஏற்படுத்தக் கூடும். மேலும் ஒரு பாட வேளையின் பிற்பாடு முதலாம் நிலைக் கல்வி போதிக்கப்படும் பாடசாலைகளில் போஷாக்கு உணவு வழங்கப்படுகின்றது. எனவே, இவ்வாறான செயற்பாடு சவால் கூடியளவு தாக்கத்தை ஏற்படுத்தாது.

கல்வியினுடைய சமனற்ற பரம்பலானது முதலாம் நிலைக் கல்வியினுடைய அடுத்த சவாலாகக் காணப்படுகின்றது. அதாவது, மாணவர்களின் வாழ்க்கை முதல் படி எனத் தொடங்குகின்ற முதலாம் நிலைக் கல்வியினுடைய செயற்பாடுகள் நகர்ப்புறம், கிராமப்புறம் என இருவகையாக எம்மால் நோக்க முடியும். நகர்ப்புறப் பாடசாலைகளில் ஒரு சிறப்பான கல்வியை அதாவது, குடும்ப சூழல், குடும்பப் பின்னணி, பெற்றோரின் பங்களிப்பு, மாணவர்களின் ஆற்றல்கள் மற்றும் திறமைகள், இணைப்பாடவிதான செயற்பாடுகள், மாணவர்களுடைய பங்காற்றல் என பல்வேறு பட்ட விடயங்கள் நகர்ப்புறங்களில் உயர் நிலையைக் கொண்டிருக்க அதே கல்வியானது கிராமப்புறங்களில் வழங்கப்படுகின்ற பொழுது பெற்றோருடைய பங்களிப்பு குறைவாகவும் பிள்ளைகளுடைய குடும்ப சூழலானது பின்தங்கிய நிலைகளிலும் ( காலை உணவு இன்மை, தாய் தந்தையர்களுக்கு இடையே முரண்பாடு ) பிள்ளைகளுடைய ஆர்வமின்மை, பெற்றோருடைய கவனயீனம் போன்ற பல்வேறுபட்ட காரணங்கள் கிராமப்புற பாடசாலையைச் சூழ்ந்திருக்கின்றன.



எனவே, இவ்வாறான ஒரு சமனற்ற பாங்கானது முதலாம் நிலைக் கல்வியினுடைய பாரிய பிரச்சினைகளுள் ஒன்று.

அது மாத்திரமன்றி, நகர்ப்புறங்களில் கூடுதலாக முதலாம் நிலைக் கல்வியைத் தொடர்வதற்கு முன்னர் மாணவர்களை பிரத்தியேக ரீதியிலான கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவர். முக்கியமாக ஆங்கிலக் கல்வி மற்றும் கணிதப் புலமை மேலும் எழுத்துப் பயிற்சி, வாசிப்புப் பயிற்சி போன்ற பல்வேறுபட்ட செயற்பாடுகளுக்கு நகர்ப்புறங்களில் மேலும் பணம் படைத்தவர்கள் இச்செயற்பாட்டில் மாணவர்களை உள்ளீர்க்கின்றனர்.

ஆனால், மிகவும் பின்தங்கிய கிராமப் பகுதியில் இருக்கின்ற மாணவர்களும் மேலும் வசதி வாய்ப்பற்ற குடும்பங்களுடைய மாணவர்களும் நேரடியான கல்வியை முன்பள்ளியைத் தொடர்ந்து முதலாம் நிலைக் கல்விக்கு உள்ளீர்க்கப்படுகின்றனர். அவர்களுக்கு சரியான வாசிப்புப் பயிற்சியை அல்லது எழுத்துப் பயிற்சியை ஆசிரியர்களானவர்கள் சிறப்பான ஒரு நோக்குகையில் வழிநடத்த வேண்டும். பல்வேறுபட்ட எனது பார்வைக்குட்பட்ட பாரிய பாடசாலைகளில் சில மாணவர்கள் கற்றல் நடவடிக்கைகளில் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றனர். அதாவது, முதலாம் தரத்தைத் தொடர்ந்து சரியான ஒரு முன்னேற்றம் இல்லாத இரண்டாம் வகுப்புக்கு ஏற்றப்படுகின்றனர். அதிலும் மாணவர்கள் சரியான ஓர் ஊக்கப்படுத்தல் இன்றி, வழி நடத்தல்கள் இன்றி மூன்றாம் வகுப்புக்கும் இறுதியாக புலமைப்பரிசில் பரீட்சைகளை எதிர்கொள்கின்றனர். அவ்வாறான பின்தங்கிய நிலையில் காணப்படுகின்ற மாணவர்கள் தொடர்ச்சியாக பின்தங்கிய இடத்திலே இருக்கின்றனர். இதற்கு யார் காரணம் என்பதை எம்மால் கூற இயலாது. ஆசிரியர்களோ அல்லது மாணவர்களுடைய செயற்பாட்டுத் தன்மையில் ஏற்படும் குறையோ என்பது கேள்விக்குரியதாகும்.

ஆகவே, முதலாம் நிலைக் கல்வியினுடைய சவால்களையும் சூழ்ந்திருக்கின்ற பிரச்சினைகளையும் இவ்வாறு அடுக்கிக் கொண்டே செல்கின்ற நிலையில், ஓர் அடித்தளத்தில் பாரியதொரு குறைபாடு காணப்படுமாயின், அந்த அடித்தளத்தின் மேலே திட்டமிட்டுள்ள வீடாக இருந்தாலும் சரி, ஒரு கட்டிடமாக இருந்தாலும் சரி, ஓர் உயர் நிறுவனத்தினுடைய ஸ்தாபனமாக இருந்தாலும் சரி அதன் மேல் ஒரு செங்கல் கூட வைக்க முடியாது. ஆகவே, அடித்தளத்தை மீண்டும் மீண்டும் சீரமைக்க வேண்டும்.

எனவே, "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா" எனப்படுகின்ற பழமொழிக்கிணங்க ஒரு கட்டடத்தினுடைய அடித்தளமானது ஒழுங்காக கட்டப்படாத இடத்தில் அதற்கு மேல் எந்த ஒரு கட்டுமானப் பணியையும் எம்மால் ஈடுபடுத்த முடியாது. ஆகையினால், ஒருவனது எதிர்காலத்துக்கு உந்து சக்தியாகக் காணப்படும் முதலாம் நிலைக் கல்வியினுடைய சிறப்பு இதிலிருந்து எமக்கு மெய்ப்படுகின்றது.

எனவே தான், வளர்முக நாடுகளில் செய்யப்பட்ட ஆய்வின்படி உயர்கல்வி, இடைநிலைக் கல்வி விளைவு வீதம் 15 வீதம் தொடக்கம் 17 வீதமாகவும் ஆரம்பக் கல்வியின் விளைவு 27 வீதமாகவும் காணப்படுகின்றதனால் பிற கல்வி நிலைகளை விட ஆரம்பக் கல்விக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. தனியாளும் சமூகமும் கல்வியினால் அடைந்த நன்மைகளை தொகை ரீதியாக எடுத்துக் கூறுவது கல்வியின் விளைவு வீதமாகும்.

'இளமையில் கல்வி சிலையில் எழுத்து' என்பதற்கிணங்க ஆரம்பக் கல்வியின் அத்திவாரம் முறையாக இடம்பெற்றால் மாத்திரமே பிள்ளையினுடைய எதிர்காலத்துக்கு வழிவகுத்து விட முடியும் என்பதை மனதில் கொண்டு பிள்ளையின் உடல் - உளநிலையை ஏற்றாற் போல ஆரம்பக் கல்வி வழங்கப்படுதல் வேண்டும்.

**விதுர்சா மாணிக்கதேவன்.**
2ஆம் வருடம் முதலாம் அரையாண்டு,
கல்வியியல் சிறப்பு கற்கை மாணவி,
கல்வி, பிள்ளை நலத்துறை,
கலை,கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்,
இலங்கை.



# வியாபாரத்துக்காக வடக்கு மீனவர்களை அடகுவைக்க வேண்டாம்

## கிழக்கு ஆளுநருக்கு அன்னராசா கோரிக்கை



இந்தியாவில் தனது வியாபாரத்தை தக்க வைக்க வடபகுதி மீனவர்களை அடகு வைக்க வேண்டாம் என கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாச முன்னாள் தலைவர் அன்னலிங்கம் அன்னராசா கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம், தந்தை செல்வா நினைவு மண்டபத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது,

கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் இந்திய தொலைக்காட்சிக்கு வழங்கிய செவ்வியொன்றில் இந்திய கடற்றொழிலாளர்கள் இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி வரவில்லை எனவும் மீன்களை பிடிக்கும்போது தற்செயலாக இலங்கை கடற்பரப்புக்குள் சென்று விடுகிறார்கள் என அவர்களின் வருகையை நியாயப்படுத்தி கருத்துத் தெரிவித்திருந்தார்.

அவரின் கருத்தை கண்டிப்பதோடு கிழக்கு ஆளுநருக்கு ஒன்றை கூறிக்கொள்ள விரும்புகிறோம். நீங்கள் இந்தியாவை சேர்ந்தவர் என்பதை சொல்லாமல் சொல்லுகிறீர்கள்.

இந்தியாவில் உங்களுக்கு பல வியாபாரங்கள் உள்ள நிலையில் ஊடக நிறுவனங்களுக்கும் முதலீடு செய்துள்ளீர்கள் என அறியக் கிடைக்கும் நிலையில் உங்கள் வியாபாரத்தை பாதுகாப்பதற்காக எமது மீனவர்களை அடகு வைக்க வேண்டாம்.

இந்தியா, எல்லைத் தாண்டிய மீனவர் பிரச்சினை சுமார் 12 வருடங்களாக நீடித்து வரும் நிலையில் கிழக்கு ஆளுநர் செந்தில் ஒரு நாளிலேனும் எமது மீனவர்களின் பிரச்சினை என்ன என கேட்டிருக்க மாட்டார்.

முடிந்தால் அவருக்கு நாங்கள் ஒன்றை கூறுகிறோம், முதலில் யாழ்ப்பாணம் வாருங்கள் எமது மீனவர்களை அழைத்து உங்களுக்கு என்ன பிரச்சினை இருக்கிறது என கேளுங்கள். முடிந்தால் அதனை தீர்த்து வைக்க முயற்சி செய்யுங்கள் என்றார்.

# ஆசிரியர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு எதிராக நீர்கொழும்பில் ஆர்ப்பாட்டம்





நீர்கொழும்பு நிருபர்

கல்வியமைச்சு முன்பாக ஆசிரியர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நீர்கொழும்பில் ஆசிரியர்கள் வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நீர்கொழும்பு புனித பேதுரு மத்திய மகா வித்தியாலயம் முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஆசிரியர்கள் பதாதைகளை ஏந்தியவாறு அரசாங்கத்துக்கு எதிராக கோஷமெழுப்பினர்.



இறைத் தூதர் நபி முஹம்மத் (ஸல்) அவர்களை புகழ்ந்து கஸீதா மற்றும் கவி பாடும் தென் இந்தியாவைச் சேர்ந்த அஹ்மத் ஸாலிஹ் பாஹிரி இலங்கைக்கு விஜயம் செய்து, பேருவளை சீனன்கோட்டைக்கு வருகை தந்தார். இதன்போது ஜமா அத்தின் சிரேஷ்ட உறுப்பினர் பர்ஹான் ரபா தலைமையில் சீனன்கோட்டை வாலிபர் ஹுழரா ஜமாத் உறுப்பினர்களை சந்தித்தார்.

படம்:பேருவளை செய்தியாளர்

# கற்பிட்டி - கீரிமுந்தலில் பெருந்தொகை பீடி இலைகளுடன் ஒருவர் கைது

ரஸீன் ரஸ்மின்

கற்பிட்டி - கீரிமுந்தல் கடற்பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இருந்து 288 கிலோ கிராம் பீடி இலைகள் கடற்படையினரால் கைப்பற்றப் பட்டுள்ளதுடன், சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை கடற்படையினரும் கற்பிட்டி பொலிஸாரும் இணைந்து அண்மையில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட பீடி இலைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்போது குறித்த வீட்டில் 09 உரைப் பைகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 288 கிலோ கிராம் நிறையுள்ள பீடி இலைகள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

# இரத்தினபுரியில் புற்றுநோய் தெளிவுபடுத்தும் நிகழ்வு



இரத்தினபுரி நிருபர்

இந்திரா புற்றுநோய் நிதியம் மற்றும் சப்ரகமுவ மாகாண ஆளுநர் அலுவலம் என்பன இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்த புற்றுநோய் தடுப்பு சம்பந்தமாக மக்களுக்கு தெளிவுபடுத்தும் நிகழ்வு அண்மையில் சப்ரகமுவ மாகாண சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவின் மூத்த மகளான இந்திரா ஜயசூரிய நினைவாக இந்திரா புற்றுநோய் நிதியம் 2016ஆம் ஆண்டு நவம்பர் 27ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு அதன் ஊடாக மக்களுக்கு இலவசமாக பாரிய சேவைகளை செய்து வருகின்றது.

மேற்படி இந்திரா புற்றுநோய் நிதியத்தின்மூலம் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட பெற்றோரின் பிள்ளைகளுக்கு உதவிகள் செய்து வருவதுடன், புற்றுநோயால் பாதிக்கப்பட்டு மஹரகம புற்றுநோய் வைத்தியசாலைக்கு வருபவர்களுக்கு மேற்படி வைத்தியசாலையின் அருகாமையில் நாளாந்தம் இலவசமாக உணவு வழங்கப்பட்டு வருவதுடன் சிறுவர் புற்றுநோய் தடுப்பு பிரிவு அமைத்தல் மற்றும் புற்றுநோய் குறித்து தெளிவுபடுத்தல், வறுமையான குடும்பங்களுக்கு உதவி புரிதல் உள்ளிட்ட பல்வேறு சேவைகளை இலவசமாக செய்து வருகின்றது.

# 14 இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல்

பு.கஜிந்தன்

யாழ்ப்பாண கடல் எல்லைக்குள் அத்துமீறி உள்நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட 14 இந்திய மீனவர்கள் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த 14 இந்திய மீனவர்களே இவ்வாறு யாழ்ப்பாண கடல் எல்லைக்குள் இரண்டு படகுகளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட அனைவரும் மயிலிட்டி துறைமுகத்துக்கு அழைத்துச் செல்லப் பட்டுள்ளனர். அங்கிருந்து அவர்கள் நீரியல்வள திணைக்களத்துக்கு அழைத்து செல்லப் பட்டு பின்னர் ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுத்தப்பட்ட போது அனைவரையும் எதிர்வரும் 08ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு ஊர்காவற்துறை நீதிமன்ற நீதிவான் கஜநிதிபாலன் உத்தரவிட்டார்.

## சீன அரசாங்கத்தின் வீடமைப்புத் திட்டம்

# இரு நிறுவனங்களுக்கிடையிலான இழுபறியை உடன் நிறுத்தவும்

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இரு தரப்பு அதிகாரிகளுக்கும் பணிப்புரை

சீன அரசாங்கத்தின் உதவித் திட்டத்தின் கீழ் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு வீடுகளை நிர்மாணிப்பதற்காக எழுமடுவ மற்றும் மஸ்மடுவ காணிகளின் உரிமை தொடர்பில் கொழும்பு மாநகர சபைக்கும் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கும் இடையிலான இழுபறியை உடனடியாக நிறுத்துமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இரு தரப்பு அதிகாரிகளிடமும் நேற்று முன்தினம் (28) பணிப்புரை விடுத்துள்ளார்.

வீட்டுத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் எழுமடுவ மற்றும் மஸ்மடுவ காணிகளின் உரிமை கொழும்பு மாநகர சபைக்கே இருந்தது. ஆனால், வீடமைப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இரண்டு காணிகளும் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் 2019இல் தமது நிறுவனத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்டது. அது நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டப் பிரிவு 50 இன் படியாகும். இதற்கு எதிராக கொழும்பு மாநகர சபை சட்ட நடவடிக்கை எடுத்திருந்தது.

அங்கு, இரண்டு நிறுவனங்களும் அரச நிறுவனங்கள் என்பதால், சம்பந்தப்பட்ட பிரச்சினைக்கு பேச்சுவார்த்தைமூலம் தீர்வு காண வேண்டும் என, நீதிமன்றம் அறிவுறுத்தியிருந்தது. குறித்த வீடமைப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை தீர்க்குமாறும் சீன அரசாங்கம் அறிவுறுத்தியிருந்தது.



குறித்த பிரச்சினையை பேச்சுவார்த்தைமூலம் தீர்த்து வைப்பதற்காக நேற்று முன்தினம் (28) பத்தரமுல்லை, செத்சிரிபாயவில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபை கேட்போர் கூடத்தில் மேல் மாகாண ஆளுநர் மார்ஷல் ஒப் த எயார் போர்ஸ் ரொஷான் குணதிலக்க பங்களிப்புடன் கலந்துரையாடல் நடைபெற்றது.

இவ்வாறான செயற்பாடுகள் நாட்டுக்கும் மக்களுக்கும் பெரும் அநீதியாகும். அரச நிறுவனங்கள் பொதுமக்களுக்காக செயல்படுகின்றன. எனவே, சட்டங்கள், கட்டளைகள் மற்றும் ஒழுங்குமுறைகளில் சிக்கிக் கொள்ளாமல் பொதுமக்களுக்கு நன்மை பயக்கும் வகையில் அரச நிறுவனங்கள் செயற்பட வேண்டுமென அமைச்சர் பிரசன்ன ரணதுங்க வலியுறுத்தினார்.

# புத்தக அறிமுக விழா

தெல்தோட்டை மெதகேகில அப்துல் ரபீக் பாத்திமா ரிஸ்மியா எழுதிய "அறிவும் ஆரோக்கியமும்" என்ற நூல் அறிமுக நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை(31) நடைபெறவுள்ளது.

எனசல் கொல்ல மத்திய கல்லூரியின் 2002/2005 வகுப்பினரின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். இந்நிகழ்வு நாளை காலை 10:30 மணிக்கு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முஸ்லிம் விவாக பதிவாளராக நியமனம்



கொழும்பு மாவட்ட கொம்பனித்தெரு பிரிவுக்கு விவாகப் பதிவாளராக மௌலவி மொஹமட் மின்ஹாஜ் அமீர் (மனாரி) நியமிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு 02, கொம்பனித்தெரு, செபல் லேன், இலக்கம் - 07 என்ற முகவரியில் வசிக்கும் இவர், திவுரும்பொல மன்னாருல் ஹுதா அரபுக்கல்லூரி மாணவரும் வேகந்த ஜும்ஆப் பள்ளிவாசல் பிரதான பேஷ் இமாமும் ஆவார். முன்னாள் விவாகப்பதிவாளர் மர்ஹூம் பாயிஸ் அமீர் பேரனும் விவாகப்பதிவாளர் மௌலவி முஸ்னி அமீர் (தீனி) - பாத்திமா சிசோனா தம்பதியின் புதல்வருமாவார்.

## புனித ஹஜ் பயணம் - 2024

# திணைக்களத்தின் உத்தியோகபூர்வ வலைத்தளமூடாக பதிவு செய்யலாம்

எம்.எஸ்.எம்.ஸாகிர்

2024ஆம் ஆண்டுக்கான ஹஜ் பயணம் மேற்கொள்ள எண்ணியுள்ளவர்கள் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ வலைத்தளத்துக்குச் சென்று அதில் வினவப்பட்டுள்ள விண்ணப்பத்துக்கு அமைவாக தங்கள் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

2024ஆம் ஆண்டுக்கான ஹஜ் முகவர்களைத் தெரிவு செய்கின்ற நேர்முகத் தேர்வு நவம்பர் 02, 03, 04ஆம் திகதிகளில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகளை முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

மேற்படி நேர்முகத் தேர்வில் தெரிவு செய்யப்படும் முகவர்களின் விபரங்களை திணைக்களம் உத்தியோகபூர்வமாக வெளியிட்டதன் பின்னர், தெரிவு செய்யப்பட்ட ஹஜ் முகவர்களுடன் மாத்திரம் 2024ஆம் ஆண்டுக்கான ஹஜ் பயணம் செல்வதற்கான ஆயத்தங்களை மேற்கொள்ளுமாறு முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் இலங்கை ஹஜ் குழு ஆகியன கேட்டுக் கொள்கின்றது.

திணைக்களத்தின் உத்தியோகபூர்வ வலைத்தள https://muslimaffairs.info/haj என்ற முகவரியூடாக மாத்திரம் தங்கள் பதிவுகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.





கொழும்பு 13, முனீஸ்வரர் முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தில் நவராத்திரியை முன்னிட்டு செவ்வாய்க்கிழமை கலசாபிஷேகம், வித்தியாரம்பம், மாலை மானப்பூத் திருவிழா (வாழைவெட்டு) ஆகியவை பிரதமகுரு சிவஸ்ரீ எஸ். சிவநேசன் சிவச்சாரியார் தலைமையில் நடைபெற்றது.

படங்கள்:நஸார்

National Lotteries Board — வெள்ளி 2023.10.27 — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத 5280 — ரூ. 37,487,408.00 — J 1 0 0 8 2 9

கொவிசெத 3522 2023.10.27 — ரூ. 65,695,688.00 — Y 09 12 59 66 Y — 77568

Mega Power 1628 2023.10.27 — 28293 — ரூ. 412,217,892.00 — V 01 13 43 53 55 — ரூ. 10,000,000.00 — ரூ. 10,000,000.00

2023.10.27 0106 — துலாம் — 5 9 8 7 7 8 — L7 1 3 — ரூ. 12,012,503.76

ராசி ஜய மல்லி 2023.10.27 589 — ரூ. 3,037,366.80 — துலாம் 07 44 49 62 துலாம்

தன நிதானய 1310 2023.10.27 — ரூ. 117,495,070.40 — G 08 15 46 66 G — 19998

National Lotteries Board — ஞாயிறு 2023.10.28 — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத 5281 — ரூ. 37,487,408.00 — G 1 7 0 6 7 4

கொவிசெத 3523 2023.10.28 — ரூ. 65,785,754.40 — L 08 39 48 75 L — 64214

Mega Power 1629 2023.10.28 — 54645 — ரூ. 412,314,008.00 — V 09 07 14 48 59 — ரூ. 10,000,000.00 — ரூ. 10,000,000.00

2023.10.28 0107 — ரிஷபம் — 9 5 6 8 0 9 — L7 2 7 — ரூ. 12,031,866.56

ராசி ஜய மல்லி 2023.10.28 590 — ரூ. 3,101,078.80 — மீனம் 08 19 40 43 மீனம்

தன நிதானய 1311 2023.10.28 — ரூ. 117,655,912.80 — S 15 48 61 71 S — 44777

# குறிகட்டுவான் விவகாரத்துக்கு தீர்வு; அமைச்சர் டக்ளஸ் நேரடி நடவடிக்கை




குறிகட்டுவான் இறங்குதுறையில் படகுகள் தரிப்பதில் காணப்பட்ட இட நெருக்கடிகளுக்குத் தீர்வு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. அத்தோடு நீண்ட ஆழ்கடல் பயணத்தை மேற்கொள்ளும் நெடுந்தீவு பயணிகள் படகுகளுக்கே இறங்கு துறையில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அமைச்சர் நேற்று குறிகட்டுவான் பகுதிக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்த போதே குறிகட்டுவான் விவகாரத்துக்கு தீர்வு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

மேலும், நேர அட்டவணைப்படி சீராக இறங்கு துறையில் படகுகள் தரித்து மக்களுக்கு அசௌகரியமற்ற சேவை வழங்குவதை ஒழுங்குபடுத்தி உறுதிப்படுத்துவதற்காக இரண்டு கண்காணிப்பாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

குறிக்கட்டுவான் இறங்குதுறையில் போக்குவரத்து சேவையில் ஈடுபடுகின்ற படகுகளை தரிப்பதற்கு ஒழுங்கு முறைகள் பின்பற்றப்படாமையினால் பொது மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டனர். குறிப்பாக, மட்டுப்படுத்தப்பட்ட சேவைகளை மாத்திரம் பயன்படுத்தி போக்குவரத்தில் ஈடுபடுகின்ற நெடுந்தீவு மக்களும் அரச ஊழியர்களும் அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். இறுதியாக நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் இது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. இந்நிலையில், நெடுந்தீவு மற்றும் நயினாதீவு பயணிகள் படகு சேவை உரிமையாளர்கள், கடற்படை மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆகியோரை நேற்று வரவழைத்து கலந்துரையாடியதையடுத்து மேற்படி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிரான போராட்டத்தில் சிங்களவர்களும் இணைவு!



பு.கஜிந்தன்

தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிரான போராட்டமானது தொடர்ச்சியாக இடம்பெற்று வருகிறது. இந்நிலையில் தென் இலங்கையைச் சேர்ந்த சகோதர மொழி பேசும் ஒரு குழுவினரும் ஆதரவு தெரிவித்து இப்போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

இவ்வாறு தென்னிலங்கையிலிருந்து தையிட்டி சட்டவிரோத விகாரைக்கெதிரான போராட்டக் களத்துக்கு வருகை தந்த பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த சில முற்போக்கு வாதிகளுக்கு, சட்டவிரோத விகாரை தொடர்பான ஆக்கிரமிப்பு குறித்து சட்டத்தரணி காண்டீபன் விளக்கமளித்தார்.

வடக்கு செய்திகள் thamilannorth@gmail.com

# சாவகச்சேரியில் நினைவேந்தல்



சாவகச்சேரி நிருபர்

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நடத்திய சாவகச்சேரிப் படுகொலையின் 36ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை (27) மாலை 5மணியளவில் சாவகச்சேரி பொதுச்சந்தை வளாகத்தில் இடம்பெற்றது.

இதன்போது 1987 ஒக்டோபர் 27 ஆம் திகதி சாவகச்சேரி சந்தைப் பகுதியை அண்மித்து இந்திய விமானப்படையின் தாக்குதலில் பலியான 68 பொதுமக்களுக்கும் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

சாவகச்சேரி நகரசபையின் முன்னாள் உறுப்பினர் வி.விஜயேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இவ் அஞ்சலி நிகழ்வில் உயிரிழந்த பொதுமக்களின் உறவுகள், பொதுமக்கள், வியாபாரிகள் எனப் பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

## பேராசிரியராகப் பதவி உயர்வு



யாழ்ப்பாணப் பல்கலைக் கழக பணியாளர் திறன் விருத்தி மையத்தின் பணிப்பாளரும் முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி ஆர். விஜயகுமாரன் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

இதற்கான ஒப்புதலை பல்கலைக்கழகப் பேரவை வழங்கியது. பல்கலைக்கழகப் பேரவை யின் மாதாந்தக் கூட்டம் கடந்த சனிக்கிழமை (28)காலை துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமைய திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவி உயர்வுக்காக விண்ணப்பித்த கலாநிதி ஆர். விஜயகுமாரனின் விண்ணப்பத்தை மதிப்பீடு செய்த மூதவையினால் விதந்துரைக்கப்பட்ட துறைசார் நிபுணர்களின் மதிப்பீட்டு அறிக்கை, நேர்முகத் தேர்வு முடிவுகள் ஆகியன பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றின் அடிப்படையில், பணியாளர் திறன் விருத்தி மையத்தின் பணிப்பாளரும் முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் நிதி முகாமைத்துவத் துறை சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி ஆர். விஜயகுமாரன் நிதி முகாமைத்துவத்தில் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

# பெரன்டினா நிறுவனத்தால் புலமைப்பரிசில் வழங்கல்





வவுனியா

பெரன்டினா நிறுவனத்தால் க.பொ.த உயர்தரப் பிரிவு மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் வவுனியா பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

நிறுவன வடமாகாண முகாமையாளர் இ. இராஜேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அன்னமலர் சுரேந்திரன், உதவி பிரதேச செயலாளர் திருமதி பிரியதர்சினி சஜீவன் மற்றும் பாடசாலை மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். இத்திட்டமானது கடந்த 2016ஆம் ஆண்டு முதல் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கஞ்சா வைத்திருந்த இருவர் கைது

பு.கஜிந்தன்

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வட்டுக்கோட்டை பகுதியில் 104 கிலோ எடையுடைய கேரளா கஞ்சாவுடன் சந்தேகநபர்கள் இருவர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

குறித்த சந்தேகநபர்கள் இருவரும் வட்டுக் கோட்டை வீதியூடாக வாகனத்தில் கஞ்சாவை எடுத்துச் செல்லும் போது கடற்படையினரால் இடைமறிக்கப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் இருவரையும் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# விஷ்ணு ஆலயங்களில் சுமங்கலி பூஜை




பு.கஜிந்தன்

ஐஸ்வரியங்களை வாரி வழங்கும் மஹா இலட்சுமி தெய்வத்துக்கான சுமங்கலி தீபபூஜை உற்சவம் நேற்று யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான விஷ்ணு ஆலயங்களில் இடம்பெற்றது.

வசந்தமண்டபத்தில் அருள்பாலித்து வீற்றிருக்கும் ஸ்ரீவேங்கட வரதராஜப் பெருமாள், சீதேவி, பூமாதேவி, மஹாலட்சுமி ஆகிய தெய்வங்களுக்கு விஷேட 108 குங்கும அர்ச்சனைகள், ஆராதனைகள் இடம்பெற்றன.

இக்கிரியைகளை ஆலய பிரதம குரு தலைமையிலான சிவாச்சாரியர்கள் நடத்தினர்.

இப்பூஜையில் பலபாகங்களில் இருந்தும் பக்தர்கள் கலந்து கொண்டனர்.

# சிதம்பர சித்தி விநாயகர் ஆலய நுழைவாயில் கதவுகளை திறக்குக!

## ஆலய அடியார்கள் கோரிக்கை

சாவகச்சேரி நிருபர்

தென்மராட்சிப் பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட மறவன்புலவு மேற்கில் அமைந்துள்ள சிதம்பர சித்தி விநாயகர் ஆலய நுழைவாயில் கதவுகளை மீளவும் திறந்து வழிபாட்டுக்கு உதவுமாறு ஆலய அடியார்கள் கோரி நிற்கின்றனர்.

இது தொடர்பாக ஆலய நிர்வாகத்தினர் மற்றும் அடியவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், சிதம்பர சித்தி விநாயகர் ஆலயமானது காலாகாலமாக எமது மூதாதையர்களால் வழிபட்டு வந்த ஓர் பிரசித்திபெற்ற தலம். அத்துடன் குறித்த ஆலயம் இந்து சமய கலாசார அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

இந்நிலையில் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் இடம்பெற்று கடந்த செப்டெம்பர் 19ஆம் திகதி வைரவசாந்தி நிகழ்வு இடம்பெற்ற போது சைவபரிபாலன சபையினர் என கூறிக்கொண்டு வந்த சிலர் மக்களின் எதிர்ப்பையும் மீறி ஆலய நுழைவாயில் கதவுகள் அனைத்தையுமே மூடி திறப்பை எடுத்துச் சென்றுள்ளனர்.

இதனால் அடியவர்கள் சீர் தொண்டு மற்றும் ஆலய வழிபாடுகளில் ஈடுபட முடியாத நிலை காணப்படுகிறது. இது தொடர்பாக தென்மராட்சிப் பிரதேச செயலகம், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் உள்ளிட்ட திணைக்களங்களுக்குத் தெரியப்படுத்தியும் இதுவரை மூடிய ஆலய கதவுகளை திறப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

இவ்விடயத்தில் உரிய திணைக்களங்கள் நடவடிக்கை மேற்கொண்டு மூடிய கதவுகளை திறந்து அடியவர்களின் வழிபாட்டுக்கு உதவ வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர்.

# மவுசாகல நீர்த்தேக்கப் பகுதியில் சட்டவிரோத இரத்தினக்கல் அகழ்வுகள்

கண்டி நிருபர்

மஸ்கெலியா பகுதியில் சட்டவிரோத இரத்தினக்கல் அகழ்வுகள் அதிகரித்துவருவதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். இந்நிலையில் அண்மையில் மஸ்கெலியா - மவுசாகல நீர்த்தேக்கத்துக்குக்கு நீரேந்திச் செல்லும் ஆற்றில் சட்ட விரோதமான முறையில் மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட எட்டுப் பேர் கைதுசெய்யப்பட்டு ஹட்டன் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதாக மஸ்கெலிய பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் ஹோட்டன்-திபர்ட்டன் மற்றும் இரத்தினபுரி பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. மாணிக்கக்கல் அகழ்வுக்காகப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் சிலவற்றையும் கைப்பற்றியுள்ளதாகப் பொலிஸார் கூறினர்.

மலையக செய்திகள் thamilanmalayagam@gmail.com



மலையகத்தின் பல பாகங்களிலும் சமூக, கல்வி, பொருளாதாரத் துறைகளில் மக்களுக்கு சேவையாற்றி வரும் அப்துல் கலாம் சர்வதேச அறக்கட்டளை அதன் சேவைகளை விரிவுபடுத்தி வருகிறது. அண்மையில் (28) தென் மாகாணத்திலும் அதன் கிளைகளை நிறுவியது. தென் மாகாணத்துக்கான பணிப்பாளர் சபை அங்கத்தவர்களுக்கான நியமனம் வழங்கப்பட்டது. படத்தில் அப்துல் கலாம் சர்வதேச ஞாபகார்த்த அறக்கட்டளையின் இலங்கைக் கிளைத் தலைவர் என். கருணாகரனும் கலந்து கொண்டார். **படம்:** கண்டி நிருபர்




வத்துகாமம் கல்வி வலயத்திலுள்ள கெங்கல்ல தமிழ் வித்தியாலயத்தில் இடம்பெற்ற கலை விழாவில் மலையக கலை, கலாசார சங்கத்தின் இரத்தின தீபம் அமைப்பின் ஸ்தாபகர் ராஜா ஜெங்கின்ஸ் மற்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர் வேலுப்பிள்ளை சிதம்பரநாதன் ஆகியோர் விசேட அதிதிகளாகக் கலந்துகொண்டனர். **படங்கள்:** கண்டி நிருபர்

## மாயமான மூன்று மாணவர்களும் மட்டக்களப்பு பகுதியில் கண்டுபிடிப்பு

மஸ்கெலியா நிருபர்

மஸ்கெலியா பிரதேச சபைக்குட்பட்ட சாமிமலை பகுதியில் உள்ள மூன்று தோட்டங்களிலுள்ள மூன்று மாணவர்கள் கடந்த சனிக்கிழமை (27) பகல் முதல் காணாமல் போயுள்ளதாக மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டிருந்ததென மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி புஷ்பகுமார தெரிவித்தார்.

குறித்த மூவரும் 15 வயதுடைய சிறுவர்களாவர். சாமிமலை 200 ஏக்கர் தோட்டத்தைச் சேர்ந்த ரவிச்சந்திரன் மனோஜ் (வயது15), சாமிமலை கொழும்பு தோட்டத்தைச் சேர்ந்த காளிமுத்து புலேந்திரன் (வயது 15), சாமிமலை ஸ்ரஸ்பி தோட்ட தெய்வகந்தை பிரிவைச் சேர்ந்த பி.துஷாந்தன் (வயது 15) ஆகியோரே காணாமல் போயுள்ளனர். இவர்கள் அனைவரும் நீராடச் சென்றபின் வீடு திரும்பவில்லை என பொலிஸ் நிலையத்தில் அவர்களின் பெற்றோர் முறையிட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இவர்களைத் தேடும் பணியில் பெற்றோர், உறவினர்கள் ஈடுபட்டிருந்த நிலையில், இவர்கள் மட்டக்களப்பு பகுதியில் வேலை தேடிச் சென்றுள்ளதாக தகவல் கிட்டியதைத் தொடர்ந்து சிறுவர்களின் பெற்றோர் மட்டக்களப்பு பகுதிக்குச் சென்று அவர்களை அழைத்து வந்துள்ளதாக மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி புஷ்ப குமார தெரிவித்தார்.

குறித்த மூவரும் சாமிமலை பகுதியில் உள்ள பாடசாலையில் கல்வி பயிலுகின்றவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

# பெண் நோயாளியின் தங்க மோதிரங்களை களவாடிய தாதி பொலிஸாரால் கைது

கண்டி நிருபர்

கட்டுகஸ்தோட்டை வைத்தியசாலையில் அவசர சிகிச்சை நிமித்தம் அனுமதிக்கப்பட்ட பெண்ணொருவரின் தங்க மோதிரங்களை களவாடிய தாதியொருவர் வெள்ளிக்கிழமை (27) பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இது பற்றித் தெரியவருவதாவது, மாத்தளை பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணொருவர் தேவை நிமித்தம் கட்டுகஸ்தோட்டைக்குச் சென்றுள்ளார். அப்போது அவருக்கு திடீர் மாரடைப்பு ஏற்பட்டதால் அவர் கட்டுகஸ்தோட்டை வைத்தியசா லையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த பெண் மற்றொரு பெண்ணுடன் கட்டுகஸ் தோட்டைப் பகுதிக்குச் சென்ற சமயமே இவ்வாறு நோய்வாய்ப்பட்டுள்ளார். கட்டுகஸ்தோட்டை வைத்தியசாலையில் அடிப்படை சிகிச்சைகள் அளிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கண்டி போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். இந்நிலையில் நோயாளி தனது கையில் பல மோதிரங்களை அணிந்திருந்ததை வைத்தியசாலைச் சிற்றூழியர்கள் கண்டுள்ளனர். அதேவேளை, கண்டி தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டபோது அம்மோதிரங்கள் இல்லாதிருப்பதையும் அவதானித்துள்ளனர். இதனையடுத்தே பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில், பொலிஸார் மோப்ப நாயின் உதவியுடன் தாதி ஒருவரைக் கைது செய்து விசாரணை செய்துள்ளனர். இதன்போது அப்பெண் அணிந்திருந்த நான்கு மோதிரங்கள் காணாமல் போயுள்ளமை தெரியவந்துள்ளது. மேற்படி தாதி கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

# பௌத்த மதத்தையும் தமிழர்களையும் இழிவுபடுத்துகின்றார் சுமனரத்ன தேரர்

## உப தலைவர் ராஜாராம் குற்றச்சாட்டு



நுவரெலியா நிருபர்

பௌத்தத்தின் புனிதத்தையும் பௌத்த மதத்தையும் தமிழர்களையும் இழிவுபடுத்துகின்றார் சுமனரத்ன தேரர். கடந்த சில நாட்களாக தொடர்ச்சியாக மட்டக்களப்பு விகாரையின் விகாராதிபதி அம்பிட்டிய சுமனரத்ன தேரர் மிகவும் மோசமாக செயற்பட்டு வருகின்றார். இதனை அரசாங்கமும் பொலிஸாரும் கண்டும் காணாமல் இருக்கின்றார்கள். இச் செயற்பாடானது அரசாங்கத்தையும் பொலிஸாரையும் தவறாகப் புரிந்து கொள்ளக்கூடிய ஒரு நிலைமையை ஏற்படுத்தலாம். உடனடியாக இது தொடர்பாக அரசாங்கமும் பொலிஸாரும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மலையக மக்கள் முன்னணியின் உப தலைவரும் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான இராஜாராம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில், பொருளாதாரத்தில் பின்னடைவைச் சந்தித்த எமது நாடு இன்று அதிலிருந்து மீள்வதற்கு முயற்சி செய்து வருகின்றது. இவ்வாறான ஒரு நிலையில், சுமனரத்ன தேரரின் செயற்பாடானது தமிழர்கள் மீதும் குறிப்பாக, வடகிழக்கு மக்கள் மீது குரோதத்தையும் ஏற்படுத்துகின்றவகையில் அமைந்துள்ளது. இவரது வார்த்தைப் பிரயோகம் மிகவும் மோசமாக இருக்கின்றது. இது தொடர்பாக இதுவரையில் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புலம்பெயர் தமிழர்களை இலங்கையில் முதலீடு செய்யுமாறு வேண்டுகோள் விடுக்கின்றார். ஆனால், பௌத்த மதத் தலைவரோ தமிழர்களை துண்டு துண்டாக வெட்டுவேன் எனக் கோஷமிடுகின்றார். இதனை அரசாங்கத்தினரும் பொலிஸாரும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இதே செயலை ஒரு தமிழ் குருக்களோ அல்லது கிறிஸ்தவ பாதிரியாரோ அல்லது முஸ்லிம் மதத் தலைவர் ஒருவரோ செய்திருந்தால் இன்று நாட்டின் நிலைமை என்னவாகியிருக்கும்? எத்தனை போராட்டங்கள் எத்தனை இன முறுகல்கள். ஆனால், தமிழர்கள் அனைவரும் மிகவும் நிதானமாகவும் பொறுப்புடனும் நடந்து கொள்கின்றார்கள். இதனை எங்களுடைய பலவீனம் என்று அரசாங்கம் கருதிவிடக்கூடாது என்றார்.



கொழும்பு, புதுச்செட்டித்தெரு சீரடி சாய்பாபா ஆலயத்தில் சொற்பொழிவாற்ற சென்னையிலிருந்து வருகை தந்த சிறப்புச் சொற்பொழிவாளர் திருமதி சௌமியா அபிஷேக் ராஜுக்கு ஆலய பிரதம அறங்காவலர் எஸ்.என்.உதயநாயகன் தலைமையில் நடைபெற்ற பாராட்டு விழாவின்போது, சீரடி கதா பூஷணம் எனும் பட்டத்துக்கான சான்றிதழை, உயர்நீதிமன்ற நீதியரசர் எஸ். துரைராஜா கையளித்தார்.நிகழ்வில் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் பி. குமார் ரட்ணம், சாயி நிலைய மகளிர் சங்கத் தலைவி திருமதி சர்வகுணதேவி சண்முகநாதன் மற்றும் பக்தர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

# சர்வதேச விழித்தெழு பெண்ணே அமைப்பினரின் தன்னார்வ உதவி



கனடாவில் இயங்கிவரும் சர்வதேச அமைப்பான "விழித்தெழு பெண்ணே" அமைப்பு உலக மக்களின் மேம்பாட்டுக்காக பல்வேறு உதவிகளை வழங்கி வருகின்றது.அந்த வகையில் முதன் முறையாக களுத்துறை மாவட்டத்தில் "விழித்தெழு பெண்ணே" அமைப்பின் நிறுவுநர் திருமதி சசிகலா நரேந்திரனின் ஆலோசனைக்கமைவாக நடைபெற்ற நிகழ்வில், ஹொரணை தமிழ் பாடசாலையில் கல்வி பயிலும் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட ஐம்பது மாணவர்களுக்கு புத்தகப் பைகள் வழங்கப்பட்டன. அத்துடன் சுயதொழிலை மேம்படுத்தும் முகமாக ஹொரணை தமிழ் பாடசாலையில் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள சுய தொழில் பயிற்சிப் பட்டறைக்கான உதவித் தொகையான ஐம்பதாயிரம் ரூபாவும் வழங்கப்பட்டது.

ஊடகவியலாளர் மணி ஸ்ரீகாந்தனின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் "விழித்தெழு பெண்ணே" அமைப்பின் பிரதம நிறைவேற்று அதிகாரி டாக்டர் நரேந்திரா விவேகானந்தன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உதவிகளை வழங்கி வைத்தார்.

அத்தோடு ஹொரணை பாடசாலை அதிபர் எஸ்.நமசிவாயம், சமூக செயற்பாட்டாளர் திருமதி தனலட்சுமி மாதவன், சமூக ஆர்வலர் மருதமுத்து சிவகணேச மூர்த்தி, பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# வருமானம் குறைந்த மாணவர்களுக்கு நிதியுதவி வழங்கல்





சிலாபம் நகரசபை எல்லைக்குட்பட்ட பாடசாலைகளில் கல்வியில் சிறந்து விளங்கும் வருமானம் குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு நிதியுதவி வழங்கும் நிகழ்வு சிலாபம், எகொடவெல்ல புனித செபஸ்தியன் மகா வித்தியாலய அதிபர் தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் வெள்ளிக்கிழமை (27) நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலாநிதி அலவி ஷெய்யத் ஷரீப்தீன் கலந்துகொண்டு நிதியுதவியை வழங்கினார்.

சிலாபம் நகர சபை முன்னாள் பிரதி மேயர் சட்டத்தரணி அ.வ. சாதிகுல் அமீனின் ஒருங்கிணைப்பில் வழங்கப்பட்ட குறித்த உதவித் திட்டத்தில் மும்மதத்தையும் சேர்ந்த மாணவர்கள் பயனடைந்தனர். இம்மாணவர்களுள் ஒருவர் கடந்த வருடம் இடம்பெற்ற உயர்தரப் பரீட்சையில் கலைப் பிரிவில் புத்தளம் மாவட்டத்தில் ஆறாம் இடத்தைப் பெற்றுக்கொண்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



ஜனநாயக மக்கள் காங்கிரஸின் கொலன்னாவ தொகுதி அமைப்பாளர் நதீமின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்களுக்கு புத்தகப் பைகள் வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை கொலன்னாவ மங்களபாய மண்டபத்தில் கட்சியின் தலைவர் பிரபா கணேசன் தலைமையில் இடம்பெற்றது.

படங்கள்: யோவாஸ்

# அரையிறுதி ஓட்டத்தில் நீடிக்கப்போவது யார்?

## தீர்க்கமான ஆட்டத்தில் இலங்கை – ஆப்கான் அணிகள் இன்று பலப்பரீட்சை

ICC MEN'S CRICKET WORLD CUP INDIA 2023



- ஹெட்ரிக் தோல்வியின் பின் அடுத்தடுத்து வெற்றி
- வெளியேறிய குமார, இன்று ஆடும் வாய்ப்பைப் பெறும் சமீர
- மெத்யூஸின் வருகையுடன் வலுவான இலங்கை
- அனைத்திலும் வெற்றிபெற்றாலே அரையிறுதி வாய்ப்பு
- இரு அணிகளுக்கும் மூன்றாவது வெற்றிக்கான பலப்பரீட்சை
- ஆஸி. யின் வெற்றியால் ஏனைய அணிகளின் அரையிறுதி அருகியது




ஏ. அகில் ஷிஹாப்

13வது ஐ.சி.சி. உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் அரைவாசி கட்டத்தை கடந்திருக்கும் நிலையில் எஞ்சிய போட்டிகள் அனைத்தும் ஒவ்வொரு அணிகளுக்கும் மிகவும் முக்கியமானதாகும். குசல் மெண்டிஸ் தலைமையிலான இலங்கை அணி தங்களது தீர்க்கமான ஆட்டத்தில் இன்றைய தினம் ஆப்கானிஸ்தான் அணியை புனேயில் எதிர்கொள்கிறது. பகலிரவு ஆட்டமாக நடைபெறவுள்ள குறித்த போட்டி பிற்பகல் 2.00 மணிக்கு ஆரம்பமாகிறது.

**ஹெட்ரிக் தோல்வியின் பின் அடுத்தடுத்து வெற்றி**

இலங்கை அணி தங்களது முதல் ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணியிடம் 102 ஓட்டங்கள் வித்தியாசத்தில் படுதோல்வியடைந்த நிலையில், அடுத்த ஆட்டத்தில் பாகிஸ்தான் அணியுடன் 344 ஓட்டங்கள் குவித்தும் தோல்வியடைந்தது. அடுத்து மூன்றாவது ஆட்டத்தில் அவுஸ்திரேலிய அணியிடம் வெறும் 209 ஓட்டங்களை மாத்திரம் குவித்து தோல்வியடைந்தது.

எனினும் நான்காவதாக நெதர்லாந்து அணியுடன் நடைபெற்ற ஆட்டத்தில் இலங்கை அணி 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் ஹெட்ரிக் தோல்வியின் பின்னர் முதல் வெற்றியை சுவைத்தது. அதன் பின்னர் நடப்பு உலக சம்பியன் இங்கிலாந்து அணியுடன் நடைபெற்ற ஆட்டத்தில் இலங்கை அணி எதிர்பாராத அபார வெற்றியை பதிவு செய்தது.

**வெளியேறிய குமார, இன்று ஆடும் வாய்ப்பை பெறும் சமீர**

இங்கிலாந்து அணியுடனான ஆட்டத்தில் மீண்டும் அணிக்கு வந்த வேகப்பந்து வீச்சாளர் லஹிரு குமார முக்கியமான 3 விக்கெட்களை பதம் பார்த்ததுடன் போட்டியின் ஆட்டநாயகன் விருதையும் வென்றார். இந்நிலையில் அவர் உபாதைக்கு முகங்கொடுத்தால் அவர் உலகக்கிண்ண குழாமிலிருந்து நீக்கப்பட்டு, பதில் வீரராக துஷ்மந்த சமீர அணியில் இணைக்கப்பட்டுள்ளார். இன்றைய ஆட்டத்தில் அவரும் ஆடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

**மெத்யூஸின் வருகையுடன் வலுவான இலங்கை**

பாகிஸ்தான் அணிக்கு எதிரான போட்டியில் தோற்பட்டை உபாதைக்கு முகங்கொடுத்த மதீஷ பத்திரன அவுஸ்திரேலியா மற்றும் நெதர்லாந்து அணிகளுடனான போட்டிகளில் விளையாடவில்லை. மதீஷ பத்திரனவின் தோற்பட்டையில் ஏற்பட்ட தசை பிறழ்வு தொடர்பாக நடத்தப்பட்ட ஸ்கேன் பரிசோதனையின் அடிப்படையில் அவர் குழாமிலிருந்து வெளியேறினார்.

அதன் அடிப்படையில் மேலதிக வீரர்களாக இந்தியாவுக்குச் சென்ற அஞ்சலோ மெத்யூஸ், துஷ்மந்த சமீர ஆகியோருள் அஞ்சலோ மெத்யூஸ் பத்திரனவுக்கு பதில் வீரராக இலங்கை குழாமில் இடம்பிடித்தார். அந்த வகையில் இங்கிலாந்துடனான ஆட்டத்தில் அணியில் இடம்பிடித்த மெத்யூஸ் இரு விக்கெட்களை கைப்பற்றி இலங்கை அணிக்கு வலுச்சேர்த்தார். துடுப்பாட்டத்திலும் அவர் அணிக்குப் பலமாக திகழ்வார் என்பதில் சந்தேகமில்லை.

**ஆஸி.யின் வெற்றியால் ஏனைய அணிகளின் அரையிறுதி அருகியது**

நியூஸிலாந்து மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் அவுஸ்திரேலிய அணி வெற்றிபெற்றதால் இலங்கை, ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் அணிகளின் அரையிறுதி வாய்ப்பு அப்படியே அருகிப்போனது. இதுவரையில் கணிப்பின் படி இந்தியா, தென்னாபிரிக்கா, நியூசிலாந்து மற்றும் ஆஸி. அணிகள் அரையிறுதிக்கு தெரிவாகும் வாய்ப்பு அதிகமாக காணப்படுகிறது. எனினும் எஞ்சிய போட்டிகளின் முடிவுகளை பொறுத்து இதில் மாற்றம் ஏற்படலாம்.

**அனைத்திலும் வெற்றிபெற்றாலே அரையிறுதி வாய்ப்பு**

இலங்கை அணி முன்னதாவே மூன்று ஆட்டத்திலும் தோல்வியடைந்திருக்கும் நிலையில் இனி ஒரு ஆட்டத்தில் தோல்வியை தழுவினால் கூட அரையிறுதிக்கான வாய்ப்பு மங்கிவிடும். இன்னும் 4 ஆட்டங்கள் எஞ்சியிருக்கும் நிலையில் அனைத்திலும் வெற்றிபெற்றால் அரையிறுதிக்கு தெரிவாகும் வாய்ப்பு உருவாகும். எனினும் நெட் ரன்ரேட் மிக முக்கியம் என்பது குறிப்பிடத்தக்கது.

**இரு அணிகளுக்கும் மூன்றாவது**




**வெற்றிக்கான பலப்பரீட்சை**

இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகள் மொத்தமாக 5 ஆட்டங்களில் ஆடியிருக்கும் நிலையில் ஒவ்வொரு அணியும் தலா இரு போட்டிகளில் மாத்திரம் வெற்றிபெற்றுள்ளன. எனவே இன்றைய ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி தொடரில் மூன்றாவது வெற்றியை சுவைக்கும். இதில் ஆப்கானிஸ்தான் அணி இறுதியாக பாகிஸ்தான் அணியை வீழ்த்தி வரலாற்று வெற்றியை சுவைத்ததும் குறிப்பிடத்தக்கது.

**நேருக்கு நேர்**

கடந்த 2014ஆம் ஆண்டு மார்ச் மாதம் இலங்கை – ஆப்கானிஸ்தான் அணிகளுக்கிடையில் முதலாவது ஒருநாள் போட்டி பங்களாதேஷின் மிர்பூரில் நடைபெற்றது. குறித்த போட்டியில் இலங்கை அணி 129 ஓட்டங்களினால் வெற்றிபெற்றது. அன்றிலிருந்து இன்று வரையில் இலங்கை – ஆப்கானிஸ்தான் அணிகளுக்கிடையில் 12 ஒரு நாள் போட்டிகள் நடைபெற்றுள்ளன.




இதில் இலங்கை அணி 7 போட்டிகளிலும் ஆப்கானிஸ்தான் அணி 3 போட்டிகளிலும் வெற்றிபெற்றுள்ளன.

ஒரு ஆட்டம் வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்துள்ளது.

**இறுதி ஐந்து போட்டிகள்**

இரு அணிகளுக்கும் இடையில் இறுதியாக நடைபெற்ற 5 போட்டிகள் தொடர்பில் அவதானம் செலுத்துகின்ற போது, இலங்கை அணி 4 ஆட்டங்களில் வெற்றிபெற்றுள்ளது.

ஒரு போட்டியில் ஆப்கானிஸ்தான் வெற்றிபெற்றுள்ளது. கடந்த செப்டெம்பர் மாதம் நடைபெற்ற ஆசியக் கிண்ண தொடரின் ஆட்டத்தில் இலங்கை வெறும் 2 ஓட்டங்களினால் த்ரில் வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது.

**ஐ.சி.சி. உலகக்கிண்ண மோதல்**

இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகள் இதுவரையில் இரண்டே இரண்டு உலகக்கிண்ண ஆட்டங்களில் (2015, 2019) நேருக்கு நேர் மோதியுள்ளன. இதில் இலங்கை இரு ஆட்டங்களிலும் வெற்றிபெற்றுள்ளது.

## இன்றைய போட்டி

போட்டி 4 5இல - 30ஆவது

ICC MEN'S CRICKET WORLD CUP INDIA 2023

| இலங்கை | | ஆப்கானிஸ்தான் |
|---|---|---|
| 7 | நேருக்குநேர் | 2 |
| 2 | உலகக்கிண்ண நேருக்கு நேர் | 0 |

புனே - பிற்பகல் 2.00 மணி

# கிழக்கு செய்திகள்

eastthamilan@gmail.com

## 05 ஆண்டு பூர்த்தி நிகழ்வில் வீதி ஊர்வலம்





மாளிகைக்காடு செய்தியாளர்

கல்முனை Metropolitan College East Campus இன் 5ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு நடத்தப்பட்ட வீதி ஊர்வலம் சனிக்கிழமை (28) நடைபெற்றது.

கல்லூரியின் தவிசாளரும் கல்முனை மாநகர சபையின் முன்னாள் முதல்வருமான கலாநிதி சிராஸ் மீராசாஹிப் தலைமையில் நடைபெற்ற வீதி ஊர்வல நிகழ்வு தவிசாளரின் தாயாரின் பங்குபற்றுதலுடன் ஆரம்பமானது.

கல்முனை Metropolitan College East Campus முன்றலில் ஆரம்பிக்கப்பட்ட இவ்வூர்வலமானது சாய்ந்தமருது பிரதேச அல்-ஹிலால் வீதியின் உள்வீதி வழியாகச் சென்று மீண்டும் கல்முனை நகரை வந்தடைந்தது.

இவ் ஊர்வலத்தில் இளைஞர்கள், கல்வி நிறுவனத்தின் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் கலந்து கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## தாந்தாமலை பாலமுருகன் சிலைக்கு குடமுழுக்கு விழா







கல்லடி, மட்டக்களப்பு செய்தியாளர்கள்

தாந்தாமலைப் பகுதியில் அமைந்துள்ள நாற்பது வட்டைச் சந்தியில் புதிதாக அமைக்கப்பட்ட மிகவும் உயரமான பாலமுருகன் சிலைக்கு ஞாயிற்றுக்கிழமை (29) திருக்குடமுழுக்கு விழா நடைபெற்றது.

தாந்தாமலை ஸ்ரீமுருகன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ மு.கு.சச்சுதானந்த குருக்கள் தலைமையில் நடைபெற்ற திருக்குடமுழுக்கு விழாவில் சிவஸ்ரீ சாம்பசிவம் சிவாச்சாரியார் உள்ளிட்ட பெருமளவான பக்த அடியார்கள், சிலை நிர்மாணக் குழுவினர் மற்றும் ஆலய அறங்காவலர் சபையினர் என அதிகளவானோர் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது ஆலய நிர்மாணப் பணிக்காக கிடைக்கப்பெற்ற நிதியிலிருந்து வறுமைக்கோட்டின் கீழ் உள்ள மாணவர்களுக்கு கற்றல் உபகரணத் தொகுதிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



2022ஆம் ஆண்டு தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு கல்வி அபிவிருத்தி மன்றத்தினால் சாய்ந்தமருது லீ மெரிடியன் மண்டபத்தில் பரிசில்கள் வழங்கும் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை(29) நடைபெற்றது. இதன்போது ஊடகவியலாளர் ஹமீட்டின் புதல்வர் ஹப்ரி ஜஹான் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு உறுப்பினரும் முன்னாள் பிரதேச செயலாளருமான ஏ.எல்.எம். சலீமிடமிருந்து பரிசில் மற்றும் சான்றிதழை பெற்றுக் கொண்டார்.

**படம்:** நிராய்க்கேணி செய்தியாளர்

## பல்கலை மாணவர்களுக்கு ட்ரோன் தொழில்நுட்ப பிரயோகப் பயிற்சி





கல்முனை செய்தியாளர்

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தினால் பேராதனை பல்கலைக்கழக புவியியற்றுறை மாணவர்களுக்கு கரையோர ஆய்வுகளில் புவிவெளியுருவவியலில் ட்ரோன் தொழில்நுட்பப் பிரயோகம் தொடர்பான கலந்துரையாடலும் களப்பயிற்சியும் சனிக்கிழமை(28) நடைபெற்றன.

தென்கிழக்குப் பல்கலைக்கழக புவியியற்றுறைத் தலைவர் விரிவுரையாளர் கே.நிஜாமிர் தலைமையில் பேராசிரியர் எம்.ஐ.எம்.கலீல் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில் புவியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ்.ரபீக்கா அமீர்தீன் ஆரம்ப உரையாற்றியதோடு, பேராதனை பல்கலைக்கழகத்தின் புவியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.எஸ்.எம்.ராசிக் கலந்துரையாடலின் நோக்கம் பற்றி மாணவர்களுக்கு விளக்கினார்.

மேலும், பேராசிரியர் முதித சமனஜித் பெரேரா மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர் சாந்த ஜெயகுமார, பேராதனை பல்கலைக்கழக புவியியற்றுறை இறுதிவருட விசேட மாணவர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் விரிவுரையாற்றிய தென்கிழக்கு பல்கலைக்கழக புவியியற்றுறைத்தலைவர் கே.நிஜாமிர், இலங்கையின் தென்கிழக்கு பிராந்திய பகுதியில் கடலரிப்பு மற்றும் அவற்றுக்கான காரணங்களை விளக்கியதோடு அவை தொடர்பான ஆய்வுகளின் ட்ரோன் தொழில்நுட்பத்தின் பிரயோகம், வினைத்திறன் மற்றும் ஆய்வு விஞ்ஞானத்தன்மை தொடர்பாகவும் விளக்கினார்.

மேலும் மாணவர்களுக்குட்ரோன் தொழில்நுட்ப வெளிக்கள பயிற்சியளிக்கப்பட்டதோடு தென்கிழக்கு கரையோரப் பிரதேசங்களில் களப் பயணங்களும் ஏற்பாடு செய்யப்பட்டன.

## முதியோர் இல்லங்களுக்கான உலருணவுப் பொதி வழங்கல்





காத்தான்குடி செய்தியாளர்

கிழக்கு மாகாணத்திலுள்ள முதியோர் இல்லங்கள், விசேட தேவையுடையோருக்கான பராமரிப்பு நிலையங்கள் என்பவற்றுக்கு இந்திய அரசினால் வழங்கப்பட்ட உலருணவுப் பொதிகள் கிழக்கு மாகாண சமூக சேவைத்திணைக்களத்தின் ஏற்பாட்டில் பகிர்ந்தளிக்கப்பட்டன.

அதற்கிணங்க, காத்தான்குடி பிரதேசத்தில் அமைந்துள்ள முதியோர் பராமரிப்பு நிலையத்துக்கான உலருணவுப் பொதிகள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி ஸாஹிர் மௌலானாவால் பகிர்ந்தளிக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் அலியார் ஒழுங்கமைப்பில் முதியோர் இல்லத் தலைவர் ஓய்வுபெற்ற அதிபர் அஸீஸ் தலைமையில் நடைபெற்ற குறித்த நிகழ்வில், பிரதேச சமூக சேவை அதிகாரி ராஜ்மோகன், முன்னாள் தவிசாளர் மர்ஹூம் அஹமட் லெப்பை, அபிவிருத்தி உத்தியோகத்தர் ஹனாதி மபாஸ், முதியோர் இல்ல நிர்வாகிகள், செய்யிட் அஹமட் சாஹிர் மௌலானா, முன்னாள் அதிபர் சயீத், கட்சி செயற்பாட்டாளர் அப்துல் அஸீஸ் உட்பட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.



அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட விளையாட்டுப் போட்டி - 2023இல் பட்டிருப்பு வலயக் கல்விப் பணிமனைக்குட்பட்ட களுதாவளை மகா வித்தியாலய தேசிய பாடசாலை மாணவன் கு.பகிர்ஜன் 14 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான 1.69 மீற்றர் உயரம் பாய்தல் போட்டியில் தங்கப் பதக்கம் பெற்றுள்ளார். இதன்போது அதிபர் க.சத்தியமோகன் தலைமையிலான பாடசாலை சமூகத்தினரால் இம்மாணவனுக்கு வரவேற்பளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**படம்:** பாண்டிருப்பு செய்தியாளர்

## அல்-ஹிலாலில் பரிசளிப்பு நிகழ்வு



நிந்தவூர் செய்தியாளர்

கல்முனை கல்வி வலயத்துக்குட்பட்ட சாய்ந்தமருது அல் - ஹிலால் வித்தியாலயத்தில் தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகளில் கட்டுரை, வாசிப்பு போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் நூலகத்தை அதிகமாகப் பயன்படுத்திய மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை பிரதான மண்டபத்தில் வெள்ளிக்கிழமை( 27) நடைபெற்றது.

பாடசாலை அதிபர் யூ.எல்.நஸார் தலைமையில் நூலக பொறுப்பாசிரியர் திரோஸா பானு ஒழுங்கு செய்திருந்த இந்நிகழ்வில் சாய்ந்தமருது கோட்டக் கல்விப் பணிப்பாளர் என்.எம்.அப்துல் மலிக் பிரதம அதிதியாகவும் ஆசிரிய ஆலோசகர் எம்.அன்சார் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கி வைத்தனர். பிரதியதிபர்கள் எச்.எச்.நுஸ்ரத் பேகம், ஏ.டீ.சிரோன் டில்ராஸ், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

## கட்டார் எழுமின் அமைப்பின் 41ஆவது மாதாந்தக் கூட்டம்



























எம்.பஹ்த் ஜுனைட்

உலகெங்கிலும் உள்ள தமிழ் தொழில் முனைவோர், தொழில் வல்லுநர்கள், துறைசார்ந்தவர்களை ஒன்றிணைத்து இயங்கும் எழுமீன் (The Rise) அமைப்பின் 41ஆவது மாதாந்தக் கூட்டம் கட்டாரில் புதன்கிழமை (25) நடைபெற்றது.

கட்டார் எழுமின் அமைப்பின் தலைவர் சக்திவேல் மகாலிங்கம் தலைமையில் நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்துக்கு பிரதம அதிதியாக சேது பொறியியல் கல்லூரி நிறுவனரும் தலைவருமான எஸ்.முஹம்மது ஜலீல் மற்றும் விசேட அதிதியாக நேச்சுரல்ஸ் பியூட்டி அகடமியின் வணிக வளர்ச்சிப் பிரிவின் முதன்மை செயல் அதிகாரி டி.சாக்கோசென் மத்தாய் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும் இதன்போது கட்டாரில் பல நிறுவனங்களில் இருந்து தொழில் முனைவோர் மற்றும் திறனாளர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர். எழுமீன் அமைப்பானது நாற்பது நாடுகளில் தமிழ் தொழில்முனைவோர், தொழில்வல்லுநர்கள், துறைசார்ந்தவர்களை ஒன்றிணைத்து இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. உலக தமிழ்த் தொழில்முனைவோர் திறனாளர்கள் ஒன்றிணையும் மாநாடு நவம்பர் 24 - 26வரை ஓமான் நாட்டில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தெருச்சண்டைக்காரன் போல் பேசுகிறார் சுமனரத்ன தேரர்



## பௌத்த பீடங்கள் கண்டிக்க வேண்டும் என்கிறார் முன்னாள் எம்.பி. ஸ்ரீநேசன்

புளியந்தீவு செய்தியாளர்

'தமிழினத்தை வெட்டுவேன்' என்ற வார்த்தை யின் ஆழத்தையும் அதன் தாக்கத்தையும் தேரர் உணர வாய்ப்பில்லை. அவர் ஒரு சாதாரண தெருச்சண்டைக்காரன் போல் பேசுகிறார். அவரை பௌத்த பீடங்கள் கண்டிக்கவேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா. ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், சுமனரத்ன தேரர் மட்டக்களப்பு இருதயபுரத்தில் அண்மையில் ஏற்படுத்திய குழப்பங்கள் குறித்து மக்கள் நன்கு அறிவார்கள்.

இந்த நாடு பல இனங்களையும் பல மொழிகளையும் பல சமயங்களையும் உள்வாங்கியிருக்கிறது. குறித்த சம்பவம் அவருக்கு முதல் தடவையல்ல. இதற்கு முன்பும் அவர் சிலவற்றை நடத்திக் காட்டியிருக்கிறார். அவர் தமிழர்களை குழப்பிவிடக்கூடாது.

அவர்களை குழப்பினால் அது விபரீதமாகி விடும். இதன் தாற்பரியங்கள்பற்றி எதுவுமே தெரியாமல் சுமனரத்ன தேரர் வாயால் உளறிக் கொட்டுவது இந்த நாட்டின் பௌத்த பீடங்களுக்கு மரியாதைக்குறைவை ஏற்படுத்துவதாக இருக்கிறது.

மேலும், அவருக்கு பக்கத்தில் ஒரு பொலிஸ் அதிகாரி நிற்பது அவருக்கு பாதுகாப்பு வழங்கவா? என்று கேட்கத் தோன்றுகிறது. ஒரு பிரஜை குற்றம் இழைத்துக் கொண்டிருக்கும் போது அந்த பொலிஸ் அதிகாரி வேடிக்கை பார்ப்பது வெட்கக்கேடு. இதற்கு அப்பால், நாட்டிலுள்ள பௌத்த பீடங்கள் சுமனரத்ன தேரரை ஒதுக்கிவிடுவதா, வைத்திருப்பதா என்று சிந்திக்க வேண்டும் என்றார்.

# ஜனாதிபதி மட்டக்களப்பு வருகை

## ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோருக்கு எதிராக பொலிஸார் வழக்குத் தாக்கல்

கனகராசா சரவணன்

ஜனாதிபதி மட்டக்களப்புக்கு அண்மையில் விஜயம் செய்தபோது அவருக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் கீழ் ஏறாவூர், மட்டக்களப்பு நீதிமன்றங்களில் வெள்ளிக்கிழமை (27) வழக்கு தொடர்ந்துள்ளதாக குறித்த பொலிஸ் நிலைய பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது எம்.பிக்கள் மற்றும் முன்னாள் எம்.பிக்கள், பௌத்த தேரர்கள் மற்றும் பண்ணையாளர்கள், அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள் என பலரும் நீதிமன்ற கட்டளையை மீறி வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த 7ஆம் திகதி ஜனாதிபதி மட்டக்களப்பு புனித மிக்கேல் ஆண்கள் தேசிய பாடசாலை 150 வருட நிறைவு விழா மற்றும் 8ஆம் திகதி செங்கலடி மத்திய மகா வித்தியாலய 149 வருட நிகழ்வு ஆகியவற்றுக்கு பிரதம அதிதியாக கலந்துகொண்டிருந்தார்.

இந்நிலையில், உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மட்டு. மேய்ச்சல் தரை பண்ணையாளர்கள் தமது மேய்ச்சல் தரையில் இருந்து சட்டவிரோத குடியேற்றவாசிகளை வெளியேறுமாறு கோரி ஒருபுறமும் அந்தப் பகுதியில் சட்டவிரோதமாக குடியேறிய சிங்கள மக்கள் தமக்கு அந்த நிலம் வேண்டும் என கோரி ஒரு புறமாகவும் ஜனாதிபதிக்கு எதிர்ப்பு தெரிவித்து வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடப்போவதாகவும் அதற்கு தலைமை தாங்குபவர்களுக்கு தடை உத்தரவு வழங்குமாறும் நீதிமன்றத்தில் பொலிஸார் கோரினர்.

இதன்போது நீதிமன்றம் வீதிகளை மறித்து பொதுமக்களின் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்காமல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதற்கு அனுமதித்ததுடன் அதனை மீறி வீதியை மறித்து பொதுமக்களின் போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டால் போக்குவரத்து விதிமுறையின் கீழ் அவர்களுக்கு எதிராக பொலிஸார் சட்ட நடவடிக்கை எடுக்கவும் நீதிமன்றம் கட்டளை வழங்கியது.

இந்த நீதிமன்ற கட்டளைகளை அவமதித்து பொதுமக்கள் போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் 7ஆம் திகதி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அம்பிட்டிய சுமனரத்ன தேரர் மற்றும் இரு தேரர்கள் உட்பட 06 பேருக்கு எதிராக மட்டு. தலைமையக பொலிஸார் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்து அவர்களிடம் முறைப்பாடு பெற்று அவர்களை நவம்பர் 27ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு அழைப்பாணை வழங்கினர்.

அதேவேளை, 8ஆம் திகதி நீதிமன்ற கட்டளையை மீறி வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சாணக்கியன் எம்.பி மற்றும் முன்னாள் எம்.பிக்களான பா.அரியநேத்திரன், ஞா.சிறிநேசன், சீ.யோகேஸ்வரன், தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சி சட்டத்தரணி சுகாஸ், தேசிய அமைப்பாளர் த.சுரேஸ், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்க தலைவி மற்றும் பண்ணையாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர் உட்பட 34 பேருக்கு எதிராக ஏறாவூர் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்து அவர்களிடம் வாக்குமூலங்கள் பெற்று அவர்களை நவம்பர் 17ஆம் திகதி ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றில் ஆஜராகுமாறு நீதிமன்ற அழைப்பாணையை வழங்கியுள்ளனர்.

இவ்வாறு இரு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 40 பேருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு தொடர்பாக அவர்களிடம் வாக்கு மூலங்களை பெறும் விசேட நடவடிக்கை சனிக்கிழமை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். அவர்களை வீடுவீடாக தேடி வாக்குமூலங்களை பெற்றுக் கொண்டு அவர்களுக்கு நீதிமன்ற அழைப்பாணைகளை வழங்கும் நடவடிக்கையை முன்னெடுத்து வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# செயலிழந்துள்ள கடற்றொழில் கூட்டுத்தாபனம் புனரமைப்பு

## கடற்றொழில் அமைச்சரால் ஐந்தாண்டுத் திட்டத்துக்கு உள்வாங்கல்

புளியந்தீவு செய்தியாளர்

மட்டக்களப்பு கடற்றொழில் கூட்டுத்தாபனம் மீனவர்களுக்கும் நுகர்வோருக்கும் விரிவான நன்மைகளையும் சேவைகளையும் வழங்கிவந்திருந்தது. துரதிர்ஷ்டவசமாக இக்கூட்டுத்தாபனம் இரு தசாப்தகாலமாக செயலிழந்துள்ளது. இதனை புனர்நிர்மாணம் செய்வதில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அதீத அக்கறை காட்டிவருகிறார். அது எமது ஐந்தாண்டு அபிவிருத்தித் திட்டத்துக்குள்ளும் உள்வாங்கப்பட்டுள்ளதென மட்டக்களப்பு மாவட்ட கடற்றொழில் உதவிப் பணிப்பாளர் எஸ்.றொக்சான் குரூஸ் தெரிவித்தார்.

அவர் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில், மட்டக்களப்பு மாவட்டம் மீன்பிடி, மீன்வளர்ப்பு, அறுவடையான மீன்களை பதனிடல் ஆகிய துறைகளில் அப்போதும், இப்போதும் முன்னணி வகித்து வந்திருக்கிறது. மீனவர்களுக்கு பலவிதமான சேவைகளை வழங்கிவந்த ஒரு கூட்டுத்தாபனம், செயலிழந்துள்ளதால் மீனவர்கள் பலவழிகளிலும் நட்டத்தையும் சிரமத்தையும் சந்தித்து வருகிறார்கள்.

இதனை மீண்டும் இயங்கச் செய்வதில் எமது அமைச்சரும் அமைச்சின் அதிகாரிகளும் தீவிரமாக செயற்பட்டுவருகின்றனர். அத்தோடு கடற்றொழில் துறையின் ஐந்தாண்டு அபிவிருத்தித் திட்டத்துக்குள்ளும் இது உள்வாங்கப்பட்டுள்ளது.

ஆதலால், இதனை மீண்டும் செயற்படுத்துவதில் தடையிருக்காது. காலப்போக்கில் வழமைபோல அதன் சேவைகள் தடையின்றி வழங்கப்படும் என்றார்.

# 6அரை அடி கஞ்சா பயிரிட்டவர் கைது



பாறுக் ஷிஹான்

அம்பாறை, உஹன பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குமாரிகம பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி 6 1/2 அடி உயரமான கஞ்சா பயிரிடப்பட்டு வந்த நிலையில் வியாழக்கிழமை(26) மாலை பொலிஸாரின் சுற்றி வளைப்பின்போது கைப்பற்றப்பட்டுள்ளது.

உஹன பொலிஸ் புலனாய்வுப்பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய இச்சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதுடன் இதன்போது சுமார் 6 1/2 அடி உயரமான கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதுடன், அவை சுமார் 3-6 அடி உயரம் வரை வளர்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் கைப்பற்றப்பட்ட கஞ்சா செடி அழிக்கப்பட்டதுடன், கைதான சந்தேக நபர் தொடர்பில் மேலதிக விசாரணைகளை உஹன பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கல்முனை வர்த்தகர்களுக்கு விழிப்புணர்வு கருத்தரங்கு



சாய்ந்தமருது செய்தியாளர்

நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட செயலகம் கல்முனை மாநகர சபையுடன் இணைந்து இம்மாநகர ஆள்புல எல்லைக்குட்பட்ட வர்த்தகர்களுக்கு ஒழுங்கு செய்திருந்த விழிப்புணர்வுக் கருத்தரங்கு வெள்ளிக்கிழமை (27) மாநகர சபையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் புலன் விசாரணை அதிகாரி முஹம்மட் ஸாஜீத் ஸமான் பிரதான வளவாளராக கலந்து கொண்டு, வியாபார செயற்பாடுகளின் போது வர்த்தகர்கள் கடைபிடிக்க வேண்டிய சட்ட, ஒழுங்குகள் மற்றும் விதிமுறைகள் குறித்து தெளிவுபடுத்தினார்.

இதன்போது வர்த்தகர்களினால் எழுப்பப்பட்ட வினாக்கள் மற்றும் சந்தேகங்களுக்கும் விளக்கங்கள் அளிக்கப்பட்டன. இந்நிகழ்வில் கல்முனை மாநகர சபையின் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம், நுகர்வோர் அதிகார சபையின் புலன் விசாரணை அதிகாரிகளான ஏ.ஏ.ஏ.ஸர்பான், ஏ.டீ.எம்.திப்சாத் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

# கோமரங்கடவெல, மொரவெவ பிரதேசங்களுக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி நியமிக்க கோரிக்கை

அப்துல்சலாம் யாசீம்

திருகோணமலை, கோமரங்கடவெல மற்றும் மொரவெவ பிரதேசத்தில் திடீர் மரண விசாரணை அதிகாரி ஒருவர் இன்மையால் அப்பகுதி மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கோமரங்கடவெல மற்றும் மொரவெவ பிரதேச செயலாளர் பிரிவின்கீழ் 15ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இப்பகுதியில் இடம்பெறுகின்ற அகால மரணங்களின்போது அவற்றை விசாரணை செய்ய திடீர் மரண விசாரணை அதிகாரி ஒருவர் இல்லாததன் காரணமாக சடலத்தை திருகோணமலை வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல வேண்டியிருப்பதாகவும் இதனால் வறிய மக்கள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கி வருவதோடு சடலத்தை அடக்கம் செய்ய காலதாமதம் ஏற்படுவதாகவும் அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அத்துடன் இறப்புச் சான்றிதழை பெற்றுக் கொள்வதற்கும் நீண்டகாலமாக அலைய வேண்டியிருப்பதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதேவேளை, வயது முதிர்ந்தோர், நோயாளர்கள் வீடுகளில் உயிரிழந்தால் கிராம உத்தியோகத்தர்கள் ஊடாக முன்னெடுக்கப்பட வேண்டிய இறப்பு அறிக்கையை கூட பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

ஆகவே, மொரவெவ, கோமரங்கடவல ஆகிய பிரதேச செயலகங்களுக்கு உடனடியாக திடீர் மரண விசாரணை அதிகாரியொருவரை நியமிக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அப்பகுதியில் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.



தம்பலகாமம் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கான உளநலம் தொடர்பான செயலமர்வு பிரதேச செயலக மண்டபத்தில் வெள்ளிக்கிழமை (27) இடம்பெற்றது. பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி வழிகாட்டுதலுக்கிணங்க இடம்பெற்ற குறித்த செயலமர்வில் வளவாளராக கிண்ணியா தளவைத்தியசாலையின் உளநலப் பிரிவு வைத்தியர் ஏ.கே.எம்.நஸ்மி கலந்து கொண்டார். உளநலப் பாதிப்பு மற்றும் மன அழுத்தத்தில் இருந்து விடுபடுவதற்கான தீர்வுகள் தொடர்பிலும் இதன்போது விழிப்புணர்வூட்டப்பட்டன. இதில் உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன் மற்றும் சக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். **படம்:** கிண்ணியா செய்தியாளர்

கிழக்கு செய்திகள்
easttamilan@gmail.com



தேசிய மட்ட தமிழ் மொழித் தினப் போட்டியில், நிந்தவூர் அல்-அஷ்ரக் தேசிய பாடசாலை மாணவி எம்.எச்.பாத்திமா ஹப்னா கட்டுரை பிரிவு - 3இல் மூன்றாமிடத்தைப் பெற்றுக்கொண்டார். இவரைப் பயிற்றுவித்த தமிழ்ப் பாட பொறுப்பாசிரியர் யை.எம்.அஷ்ரப் மற்றும் தமிழ் இலக்கிய மன்ற முன்னாள் தலைவர் பல்கலைக்கழக மாணவன் முஷ்பிர் அஹமட், பாடசாலை அதிபர் அ.அப்துல்கபூர் ஆகியோருக்கு பாடசாலை சமூகம் சார்பாக பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் தமது வாழ்த்துகளைத் தெரிவிக்கின்றனர்.

**படம்:** பொலிவேரியன் செய்தியாளர்

## போடியார் புலம்பல்!



சம்பந்தன் பதவி விலக வேண்டும் என சுமந்திரன் சொல்லியுள்ளதை சம்பந்தன் ஐயா தவறாக எடுக்கமாட்டார் என முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் சொல்லியிருக்காரு எாறுவா? அடே சம்மந்தருக்கு வாக்குபோட்டு நாடாளுமன்றம் அனுப்புன திருகோணமல தமிழ்மக்கள் சம்மந்தருதான் பொருத்தமானவர் எண்டு எாறுவா வாக்குபோட்டவங்க அவங்கள் தான் சம்மந்தர் தேவயா? வேணாமா? எண்டத சொல்ல உரிம இருக்குது யாழ்ப்பாணத்திலயும், முல்லத்தீவுலயும் இருந்து நீங்க ஏண்டாப்பா குரைக்கிறயள் உட்டுப்போட்டு ஒங்கட மாவட்டத்த பாருங்க.!

# 21மில்லியன் ரூபா செலவில் வீதி புனரமைப்பு



கல்லடி செய்தியாளர்

21 மில்லியன் செலவில் கொங்கிறீட் வீதியாக புனரமைக்கப்பட்ட மட்டக்களப்பு மாநகர சபை எல்லைக்குட்பட்ட திமிலைதீவு டானியல் வீதியினை கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தனுடன் இணைந்து பெருந்தெருக்கள் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் ஸ்ரீபால கம்லத் மக்கள் பாவனைக்காகத் திறந்து வைத்தார்.

கிராமிய குழுத் தலைவர் மதிருபன் தலைமையில் நடைபெற்ற குறித்த நிகழ்வில், இராஜாங்க அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் பூ.பிரசாந்தன், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிறைவேற்று பொறியியலாளர் லிங்கேஸ்வரன் இளைஞரணி செயலாளர் எஸ்.சுரேஸ்குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தண்ணீர்த்தொட்டியில் விழுந்து சிறுவன் பலி

அப்துல்சலாம் யாசீம்

திருகோணமலை, எத்தாபெத்தவெவ பகுதியில் தண்ணீர்த்தொட்டியில் விழுந்து சிறுவனொருவன் உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் சனிக்கிழமை(28) இரவு இடம்பெற்றுள்ளது. இவ்வாறு உயிரிழந்த சிறுவன் அதே பகுதியைச் சேர்ந்த சனுக பாசன (14வயது) எனவும் தெரிய வருகின்றது.

சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது, தாய் உயிரிழந்துள்ளதாகவும் தந்தை பிள்ளைகளை விட்டுச்சென்று வேறு இடத்தில் வசித்து வருவதாகவும் குறித்த சிறுவன் தனது மாமாவின் வீட்டில் வாழ்ந்து வந்த நிலையில் வேளாண்மை செய்வதற்காக தண்ணீர்த்தொட்டியில் நெல் போடப்பட்டிருந்த நிலையில், அதற்குள் இறங்கி விளையாடிக்கொண்டிருந்தபோது விழுந்துள்ளதாகவும் தெரிய வருகின்றது.

குறித்த சிறுவனுக்கு ஏற்கனவே வலிப்பு நோய் இருப்பதாகவும் தொட்டியில் விளையாடிக் கொண்டிருந்த போது வலிப்பு நோய் ஏற்பட்டிருக்கலாம் எனவும் உறவினர்கள் தெரிவிக்கின்றனர். இருந்தபோதிலும் சிறுவனின் சடலம் பிரேத பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. சடலம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மொரவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# 'மலையக தமிழர் 200' நினைவு கண்காட்சி

மருதமுனை செய்தியாளர்


மலையக தமிழ் மக்களின் வாழ்க்கை வரலாற்றினை பிரதிபலிக்கும் மலையகத் தமிழரின் 200 வருடகால வரலாற்றினை நினைவுகூரும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கண்காட்சி நவம்பர் 2ஆம், 3ஆம் திகதிகளில் காலை 9.00 மணி தொடக்கம் பி.ப 5.30 வரை கல்முனை நகரிலுள்ள கிறிஸ்ட இல்ல மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

குறித்த கண்காட்சியினை, அம்பாறை மாவட்ட உண்மை மற்றும் நல்லிணக்கத்துக்கான ஒன்றியம் கண்டி சமூக அபிவிருத்தி நிர்வாகத்துடன் இணைந்து ஏற்பாடு செய்துள்ளது.

குறித்த கண்காட்சியில் மலையகத் தமிழரின் வரலாற்று ஆவணங்கள், பொருளாதார, கலை, கலாசார, அரசியல் மற்றும் சமூகவியல் தொடர்பான விடயங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

இந்நிகழ்வில் கௌரவ அதிதியாக இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக்க அபேவிக்ரம, சிறப்பு அதிதியாக சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பி.முத்துலிங்கம், கௌரவ அதிதிகளாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.ஜெகதீசன், பிரதேச செயலாளர்கள், அரச உயர் அதிகாரிகள், சமயத் தலைவர்கள், சிவில் சமூக அமைப்புகளின் முக்கியஸ்தர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

# பாவனைக்குதவாத பெரிய வெங்காய மூடைகள் மீட்பு



களுதாவளை செய்தியாளர்

யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்புக்கு மனித பாவனைக்குதவாத பெரிய வெங்காயத்தை கனரக லொறிமூலம் கொண்டுச்சென்ற நபரை பொதுச் சுகாதார அதிகாரிகள் கைது செய்ததாக மட்டக்களப்பு கோட்டைமுனை பொது சுகாதார பரிசோதகர் சீ.மிதுன்ராஜ் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜி.சுகுணனின் ஆலோசனையின் பேரில் மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரியின் வழிகாட்டலில் குறித்த கனரக லொறி மடக்கிப் பிடிக்கப்பட்டு லொறியிலிருந்து மனித பாவனைக்குதவாத 40 மூடைகளைக் கொண்ட 960 கிலோ பெரிய வெங்காயம் மீட்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது 10ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன் ஆறு மாத கால ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையும் நீதவான் நீதிமன்ற நீதிபதி பீட்டர் போலினால் விதிக்கப்பட்டது.

# உலக செய்திகள்

## தொடர் குண்டுவெடிப்புகளால் கேரளாவில் பெரும் பதற்றம்

**ஒருவர் உயிரிழப்பு; 35 பேர் படுகாயம் ஐவரின் நிலை கவலைக்கிடம்**



கேரள மாநிலம் களமச்சேரியில் மத வழிபாட்டு கூட்டத்தில் நேற்று (29) இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 35 பேர் படுகாயமடைந்துள்ளனர். இதில் 05 பேரின் நிலை கவலைக்கிடமான நிலையிலுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்நிலையில், தாக்குதலை நடத்தியது தான்தான் எனத் தெரிவித்து ஒருவர் சரணடைந்துள்ளார்.

கேரள மாநிலம் களமசேரி பகுதியில் ஜெஹோவா வழிபாட்டுக் கூட்டம் ஒன்று நேற்று (29) நடைபெற்றநிலையில் அங்கு பயங்கர சத்தத்துடன் அடுத்தடுத்து 03 முறை குண்டுகள் வெடித்துள்ளன. இந்நிலையில், பிரார்த்தனையில் கலந்துகொண்டிருந்தவர்கள் அங்கிருந்து அலறியடித்து ஓட்டம் பிடித்தனர். குண்டு வெடித்த இடத்தில் தீப்பற்றி எரிந்ததால் அங்கு பதற்றமான சூழல் நிலவியது. தீயை அணைக்கும் பணியில் தீயணைப்பு வீரர்கள் ஈடுபட்டனர்.

இந்த குண்டு வெடிப்பு சம்பவத்தில் பெண் ஒருவர் உயிரிழந்ததாகவும் குழந்தைகள் உட்பட 35 பேர் படுகாயமடைந்த நிலையில், ஐவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் களமசேரி பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலும் படுகாயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு கொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அதே சமயம் குண்டுவெடிப்பு குறித்து மாநில பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். கேரளாவில் நிகழ்ந்த இந்த குண்டு வெடிப்பு சம்பவம் மக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த சம்பவத்தின் எதிரொலியாக தமிழகத்திலும் பல்வேறு இடங்களில் பாதுகாப்புகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக, மாநில எல்லைகளில் தீவிர வாகன சோதனைகளுக்குப் பிறகே வாகனங்கள் தமிழக எல்லைக்குள் அனுமதிக்கப்பட்டு வருகிறது. கோவையில் 13 இடங்களில் தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**ஒருவர் சரண்**

இந்நிலையில், திருச்சூர் மாவட்டத்துக்கு உட்பட்ட கொடக்கரா பகுதியிலுள்ள பொலிஸ் நிலையத்தில், தானாக ஒருவர் சரணடைந்துள்ளார். "வெடிகுண்டு வைத்தது நான்தான்" எனக்கூறி அவர் சரணடைந்துள்ளார்.

அந்த நபரை பொலிஸார் முழுவதுமாக நம்பவில்லை என்றாலும், அவரிடம் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர். இவரின் பின்னணி என்ன என்பது குறித்தும் குண்டுவெடிப்புக்கும் இவருக்கும் தொடர்புகள் உள்ளனவா என்பது குறித்தும் பொலிஸார் விசாரணை நடத்திவருகின்றனர்.

இதற்கிடையில், சந்தேகத்தின் பேரில் கண்ணூரில் வசிக்கும் குஜராத்தைச் சேர்ந்த ஒருவரை காவலில் எடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இருவரின் முழு விபரமும் வெளியிடாத நிலையில், விசாரணையானது தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

## எகிப்தில் ஒரே நேரத்தில் பல வாகனங்கள் மோதிய விபத்தில் 32 பேர் உயிரிழப்பு



எகிப்து தலைநகர் கெய்ரோவில் ஒரே நேரத்தில் பல வாகனங்கள் ஒன்றோடொன்று மோதிக் கொண்ட விபத்தில் 32 பேர் உயிரிழந்துள்ளதுடன், 63 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வாகனம் ஒன்றிலிருந்து வெளியாகிய எண்ணெய் கசிவால் அந்த வழியாகச் சென்ற பல வாகனங்கள் தீப்பிடித்து எரிந்ததே ஏராளமான வாகனங்களின் மோதலுக்கு காரணம் என தகவல் வெளியாகியுள்ளது. Beheira governorate பகுதியிலுள்ள முக்கிய பாலைவன வீதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

**இன்று 24ஆவது நாளாகவும் தொடரும் இஸ்ரேல் - ஹமாஸ் மோதல்**

# 3,600 குழந்தைகள் உட்பட 8,200 பலஸ்தீனர்கள் கொன்று குவிப்பு

## "ஹமாஸுக்கு எதிரான 02ஆம்கட்ட போர் தீவிரமாக தொடங்கியுள்ளது"

### இஸ்ரேல் பிரதமர் நெதன்யாஹு தெரிவிப்பு






இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் போராளிகளுக்கிடையிலான மோதல் இன்று (30) 24ஆவது நாளாகவும் நீடிக்கும் நிலையில் இஸ்ரேல் தாக்குதலில் காஸா நகரம் உருக்குலைந்து வருகிறது. உணவு, குடிநீர், எரிபொருள் மற்றும் மின்சாரமின்றி சுமார் 23 இலட்சம் பேர் பரிதவித்து வரும் நிலையில், போரில் இருதரப்பிலும் ஏற்பட்ட உயிரிழப்புகளின் எண்ணிக்கை 10 ஆயிரத்தை நெருங்கியுள்ளது.

இதனிடையே போரில் அப்பாவி பொதுமக்கள், குறிப்பாக பெண்களும் சிறுவர்களும் அதிகளவில் பாதிக்கப்படுவதால் போரை உடனடியாக நிறுத்த வேண்டுமென ஐ.நா. மற்றும் உலக நாடுகள் பலவும் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன. ஆனால், போர் நிறுத்தத்துக்கான அழைப்பை இஸ்ரேல் தொடர்ந்து நிராகரித்து வருகிறது.

இந்நிலையில் "ஹமாஸ் போராளிகளுக்கு எதிரான இரண்டாம் கட்டப்போர் தொடங்கியுள்ளது" என தெரிவித்துள்ள இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹு, "எதிரிகளை தோற்கடிப்பதும் நமது இருப்புக்கு உத்தரவாதமளிப்பதும் எங்களுக்கு ஒரு முக்கிய குறிக்கோள்" எனவும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், காஸா முனை பகுதியில் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலால் அங்கு தொலைத்தொடர்பு சேவைகள் துண்டிக்கப்பட்டன. இணையதளம், செல்போன் சேவைகள் பெருமளவு துண்டிக்கப்பட்டன. இதனால், காஸா மக்கள் வெளியுலகத்தொடர்பு இல்லாமல் பெரும் பாதிப்பை சந்தித்தனர்.

இந்நிலையில், காஸாவில் தொலைத்தொடர்பு சேவைகள் நேற்று (29) மீண்டும் செயற்பாட்டுக்கு வந்துள்ளன. இணையதளம் மற்றும் செல்போன் சேவைகள் மீண்டும் செயல்பாட்டுக்கு வந்துள்ளன.

**போர் நீண்ட மற்றும் கடினமானதாக இருக்கும்**

மேலும், காஸாவில் தரைவழித் தாக்குதல் முடுக்கிவிடப்படுவதால் போர் நீண்டதாகவும் கடினமாகவும் இருக்கும் எனவும் பிரதமர் நெதன்யாஹு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

டெல்அவிவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த நெதன்யாஹு,

"காஸா மீதான போர் நீண்ட மற்றும் கடினமானதாக இருக்கும். இஸ்ரேல் தனது தாக்குதலை மையமாக வைத்துள்ள வடக்கு காஸா பகுதியை பலஸ்தீனிய குடிமக்கள் காலி செய்யவேண்டும். ஹமாஸ் பிடியிலுள்ள 200இற்கும் மேற்பட்ட பணயக்கைதிகளை மீட்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது போரின் இரண்டாவது கட்டமாகும், அதன் இலக்குகள் தெளிவாகவுள்ளன. ஹமாஸின் ஆட்சி, இராணுவ திறன்களை அழிப்பது மற்றும் பணயக்கைதிகளை வீட்டுக்கு கொண்டு வருவது" என்று அவர் தெரிவித்துள்ளார்.



**ஹமாஸின் 450 இலக்குகளை குறிவைத்து தாக்குதல்**

கடந்த 24 மணி நேரத்தில் ஹமாஸ் போராளிகளின் 450 இலக்குகளை குறிவைத்து தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

**8,000 இற்கும் மேற்பட்ட பலஸ்தீனியர்கள் பலி**

பலஸ்தீனத்தின் காஸாவை ஆளும் ஹமாஸ் படையினர் கடந்த 7ஆம் திகதி எல்லைதாண்டி திடீரென இஸ்ரேலுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தினர். இதற்கு பதிலடியாக இஸ்ரேல் இராணுவம் நடத்தி வரும் போர் இன்று (30) 24ஆவது நாளாகவும் தொடர்கிறது.

இருதரப்பு மோதலில் சிக்கி 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அப்பாவி பொதுமக்கள் கொன்று குவிக்கப்பட்டுள்ளதுடன் 27 ஆயிரத்துக்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர்.

அந்தவகையில் காஸாவில் 3,600இற்கும் மேற்பட்ட குழந்தைகள் 1,863 பெண்கள் மற்றும் 400 இற்கும் மேற்பட்ட முதியோர் என 8,005 மேற்பட்ட பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 22 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

இதேவேளை, காஸாவில் 950இற்கும் மேற்பட்ட குழந்தைகள் உட்பட 1,650இற்கும் அதிகமானோர் காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், இஸ்ரேல் தரப்பில் 311 படையினர் மற்றும் பொலிஸார் 58 பேர் உட்பட 1,500 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளதுடன் 5,500இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர். அத்தோடு இஸ்ரேலில் 299 பேர் ஹமாஸ் போராளிகளால் பணயக் கைதிகளாக பிடித்துச் செல்லப்பட்டுள்ளதுடன் 100 பேர் காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



**வடகாஸாவில் இஸ்ரேலின் காலாட்படை - கவச வாகனங்கள்**

இந்நிலையில், இதுவரை வான்வழித் தாக்குதல் நடத்தி, காஸாவில் பெரும்பாலான கட்டடங்களை தரைமட்டமாக்கிய இஸ்ரேல், அடுத்தகட்டமாக கடந்த வெள்ளிக்கிழமை தரைவழித் தாக்குதலை தொடங்கியது.

இந்நிலையில், நேற்று முன்தினம் இரவிலிருந்து விடிய விடிய போர் விமானங்கள் குண்டு மழை பொழிந்த நிலையில், இஸ்ரேல் இராணுவத்தின் காலாட்படை மற்றும் கவச வாகனங்கள் வடக்கு காஸாவில் தரைவழித் தாக்குதலில் தீவிரமாக ஈடுபட்டன.

**150 சுரங்கங்கள் அழிப்பு**

இதில் ஹமாஸின் 150 சுரங்கங்கள் மற்றும் நிலத்தடி பதுங்கு குழிகள் அழிக்கப்பட்டுள்ளதாக இஸ்ரேல் இராணுவம் தகவல் தெரிவித்துள்ளது. இதுதவிர, பலஸ்தீன தொலைத்தொடர்பு நிறுவனங்களின் கட்டடங்கள் மீதும் போர் விமானங்கள் குண்டுவீசின. இதனால் காஸாவில் தகவல் தொடர்பு முற்றிலும் துண்டிக்கப்பட்டுள்ளது.



**தகவல் தொடர்பு துண்டிப்பு**

இதனால், உயிரிழப்பு குறித்த தகவல் அறிவது, மருத்துவ சேவை பெற அம்பியூலன்ஸ்களை அழைப்பதற்கு இனி வழியில்லாத நிலை ஏற்பட்டுள்ளது. காஸாவிலுள்ள தங்களின் பணியாளர்களை தொடர்பு கொள்ள முடியவில்லை என உலக சுகாதார நிறுவனமும் அறிவித்திருந்தது. சர்வதேச ஊடகவியலாளர்கள் தகவல் சேகரிப்பதும் கடினமாகியது. தற்போது செட்லைட் (செய்மதி) போன்கள் மட்டுமே இயங்குவதாக சில ஊடக தகவல்கள் தெரிவித்தன. ஏற்கனவே, உணவு, குடிநீர், மின்சாரம், எரிபொருள் இல்லாமல் காஸாவில் 23 இலட்சம் மக்கள் தவிக்கும் நிலையில் தகவல் தொடர்பும் துண்டித்திருப்பதன் மூலம், உலகிலிருந்து முற்றிலுமாக அவர்கள் துண்டிக்கப்பட்டனர்.

மேலும், தொண்டு அமைப்புகள் தங்களுக்கிடையே ஒருங்கிணைந்து நிவாரணப் பணிகளை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.



**எலான் மஸ்க் உதவிக் கரம்**

காஸாவில் செயற்படும், சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட தொண்டு அமைப்புகளுக்கு தங்களது 'ஸ்டார்லிங்க்' மூலம் உதவியளிக்க பிரபல அமெரிக்க தொழிலதிபர் எலான் மஸ்க் முன்வந்துள்ளார்.

இது குறித்து அவருக்குச் சொந்தமான எக்ஸ் தளத்தில், 'இணையதள இணைப்புக்காக காஸாவிலிருந்து எங்களை யாரும் தொடர்பு கொள்ளவில்லை. அவ்வாறு தொடர்பு கொள்ளும்போது, சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட அமைப்புகளுக்கு எங்களது ஸ்பேஸ்-எக்ஸ் நிறுவனம் இணைய இணைப்பு அளிக்கும்'' - என்றார்.

இந்நிலையில், காஸாவுக்கு மீண்டும் நேற்று(29) இணையசேவை வழங்கப்பட்டுள்ளது. விமானப்படை தாக்குதலில் சேதமான தொலைத்தொடர்பு கேபிள்கள் பராமரிப்பு பணி முடிவடைந்து மீண்டும் சேவை தொடங்கப்பட்டுள்ளது. இணையதளம் மற்றும் செல்போன் சேவைகள் மீண்டும் செயல்பாட்டுக்கு வந்துள்ளன.

**காஸாவில் உடனடி போர் நிறுத்தம் செய்யவேண்டும்**

"காஸாவில் உடனடியாக போர் நிறுத்தம் செய்யவேண்டும் என ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டேரஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், மத்திய கிழக்கு நாடுகள் உடனடியாக போர் நிறுத்தம் செய்ய வேண்டும். பணயக் கைதிகளாக அழைத்துச் செல்லப்பட்டவர்கள் விடுவிக்கப்படவேண்டும். உயிர் காக்கும் பொருட்கள் மக்களிடம் தங்கு தடையின்றி கொண்டு சேர வழிவகுக்கவேண்டும் என்பதுடன் அனைவரும் தங்களது பொறுப்பை உணர்ந்து செயற்பட வேண்டும். இது உண்மைக்கான நேரம். காலம் நாம் யார் என்பதை தீர்மானிக்கும் எனத் தெரிவித்துள்ளார்.

**120 நாடுகளின் ஆதரவுடன் நிறைவேறிய போர் நிறுத்தத் தீர்மானம்**

இந்நிலையில், காஸாவில் உடனடி மனிதாபிமான போர் நிறுத்தம் தொடர்பான தீர்மானம் ஐ.நாவில் நிறைவேறியுள்ளது.

ஐ.நாவில் ஜோர்தான் கொண்டு வந்த தீர்மானத்தில் காஸாவில் முடக்கப்பட்டுள்ள உயிர் காக்கும் மருந்துகள் மற்றும் அத்தியாவசிய சேவைகளை தடையின்றி வழங்குவதற்கான அவசர தேவையை உணர்ந்து, மனிதாபிமான போர் நிறுத்தத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

இத் தீர்மானத்துக்கு 120 நாடுகள் ஆதரவாகவும் 14 நாடுகள் எதிராகவும் இந்தியா உட்பட 45 நாடுகள் வாக்களிக்காமல் தவிர்ந்தன. இதையடுத்து இந்த தீர்மானம் ஐ.நா. பொதுச் சபையில் நிறைவேற்றப்பட்டது. ஆனால், இந்த தீர்மானம் வெறுக்கத்தக்க வகையில் இருப்பதாக இஸ்ரேல் வெளியுறவுத் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

**உலகத்தின் மௌனம் கலைய இன்னும் எத்தனை குழந்தைகள் பலியாக வேண்டும்?**

"இந்த உலகம் தன் மௌனத்தைக் கலைக்க இன்னும் எத்தனை குழந்தைகள் பலியாக வேண்டும்" என ஸ்கொட்லாந்து அமைச்சர் ஹம்ஸா யூசுஃப் கேள்வியெழுப்பியுள்ளார். ஹமாஸை ஒட்டுமொத்தமாக ஒழிக்கும் வரை போரை நிறுத்தப் போவதில்லை என இஸ்ரேல் திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

23 நாட்களாக காஸா மீது வான்வழித் தாக்குதல்களை நடத்திவரும் இஸ்ரேல் இராணுவம் தரைவழித் தாக்குதலையும் தொடங்கியுள்ளது. இந்த தாக்குதலால் காஸாவில் உயிரிழப்புகள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. போரில் பலியானவர்களில் பெரும்பாலானோர் குழந்தைகள் மற்றும் பெண்கள் ஆவர்.

இஸ்ரேலின் தொடர் தாக்குதலால் தற்போது காஸா பகுதிகளில் இணைய மற்றும் தொலைத்தொடர்பு சேவைகள் முற்றிலுமாக துண்டிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், இதற்கு ஸ்கொட்லாந்து அமைச்சர் ஹம்ஸா யூசுஃப் தனது எதிர்ப்பை தெரிவித்துள்ளார். இதனை தனது அதிகாரபூர்வ சமூக வலைத்தளத்தில், "காஸா மிக மோசமான குண்டு வீச்சு தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. தொலைத்தொடர்பு சேவை முற்றிலுமாக துண்டிக்கப்பட்டுள்ளது. இந்த உலகம் தன் மௌனத்தைக் கலைக்க இன்னும் எத்தனை குழந்தைகள் பலியாக வேண்டும்?" என்று அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7